Postal Reg.No. GDP-39/2017-2019

بسم اللہ الرحمن الرحیم　　نحمدہ ونصلی علی رسولہ الکریم　　وعلی عبدہ المسیح الموعود

وَلَقَدْ نَصَرَكُمُ اللّٰهُ بِبَدْرٍ وَأَنْتُمْ أَذِلَّةٌ

தொகுதி 2

வருடாந்திர சந்தா ரூபாய் 300/-

# பதர்

வார இதழ் - காதியான்

The Weekly BADAR Qadian TAMIL

இதழ் 16

ஆசிரியர் முஸ்ஸம்மில் அஹ்மது

துணை ஆசிரியர் ரஃபீக் அஹ்மது

22 ரஜப் 1438 ஹிஜ்ரி கமரி　20 ஷஹாதத் 1396 ஹிஜ்ரி ஷம்ஸி

20 ஏப்ரல் 2017

## அஹ்மதிய்யா செய்திகள்

ஸய்யிதுனா ஹஸ்ரத் அமீருல் முஃமினீன் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்கள் அல்லாஹ்வின் அருளால் நலமுடன் இருந்து வருகின்றார்கள். அல்ஹம்து –லில்லாஹ். ஜமாஅத் சகோதரர்கள் ஹுஸூர் அவர்களின் சிறந்த உடல் நலத்திற்காகவும், அவர்களின் நீண்ட ஆயுளுக்காகவும், அவர்களது உயர்வான நோக்கங்களில் வெற்றி கிடைப்பதற்காகவும், அவர்களது குறிப்பான பாதுகாப்பிற்காகவும், தொடர்ந்து துஆ செய்து வாருங்கள். அல்லாஹ் ஒவ்வொரு நொடியும் ஹுஸூர் அவர்களது பாதுகாவல –னாகவும் உதவியாளனாகவும் இருப்பானாக. மேலும் அவர்களுக்கு உதவி செய்வானாக! ஆமீன்

**உங்களிடையே எவர் தனது சகோதரரின் தவறுகளை அதிகமாக மன்னிப்பாரோ அவரே பெரும் கண்ணியத்திற்குரியவராவார். இதற்கு மாறாக மன்னிக்காமல் பிடிவாதத்தில் ஆழ்ந்திருப்பவர் பாக்கியமிழந்தவராக இருக்கின்றார்.**

## வாக்களிக்கப்பட்ட மஸீஹும் மஹ்தியுமான ஹஸ்ரத் அக்தஸ் மிர்ஸா குலாம் அஹ்மது காதியானி (அலை) அவர்களின் கூற்றுகளிலிருந்து…

உங்களிடம் முழுமையான ஒரு புரட்சி உண்டாக வேண்டும் என இறைவன் நாடுகின்றான். மேலும் அவன் உங்களிடமிருந்து ஒருவித மரணத்தை விரும்புகிறான். அதன் பின் அவன் உங்களை உயிர்ப்பிப்பான். நீங்கள் ஒருவருக்கொருவர் உடனடியாக சமாதானத்தை ஏற்படுத்திக் கொள்ளுங்கள். உங்களது சகோதரர்களின் தவறுகளை மன்னியுங்கள். ஏனென்றால், தனது சகோதரனுடன் சமாதானத்தை விரும்பாதவன் தீயவனாக இருக்கின்றான். அவன் துண்டிக்கப்படுவான். ஏனெனில், அவன் பிரிவினையை ஏற்படுத்துகின்றான்.

நீங்கள் எல்லா விதமான மன இச்சைகளை விட்டு விடுங்கள். நீங்கள் ஒருவருக்கொருவர் வெறுப்பை விட்டு விடுங்கள். நீங்கள் உண்மையாளர்களாக இருந்து கொண்டு பொய்யர்களைப்போல் பணிவுடன் நடந்து கொள்ளுங்கள். இதனால் நீங்கள் மன்னிக்கப் -படுவீர்கள். மன இச்சை அதிகரித்துக் கொண்டு செல்வதை சற்றும் அனுமதிக்காதீர்கள்.

ஏனெனில், எந்த வாசல் வழியாக நீங்கள் அழைக்கப்பட்டிருக் -கின்றீர்களோ அவ்வாசல் வழியாக மன இச்சை கொண்ட மனிதரால் ஒருபோதும் நுழைய முடியாது. இறைவனின் வாயிலிருந்து வெளி வந்து, நான் விளக்கியிருப்பவையாகிய இந்த விஷயங்களை ஏற்றுக் கொள்ளாதவன் எவ்வளவு பேரிழந்தவனாக இருக்கின்றான். வானத்தில் உங்களோடு இறைவன் திருப்தி அடைய வேண்டுமென்று நீங்கள் விரும்பினால் உங்களில் ஒருவருக்கொருவர் ஒரே வயிற்றிலிருந்து பிறந்த இரு சகோதரர்களைப் போல் ஆகி விடுங்கள். உங்களிடையே கண்ணியத்திற்குரியவர் தன்னுடைய சகோதரனின் தவறுகளை மன்னிக்கின்றவரேயாவார். பிடிவாதம் கொண்டு அவ்வாறு மன்னிக்கத் தவறுகின்றவர் பேரிழந்தவர் ஆவார். அவரோடு எனக்கு எவ்வித உறவுமில்லை. இறைவன் தூய்மையானவனாகவும் தன்மானமிக்கவனு -மாய் இருப்பதால் அவனது சாபத்திற்கு அதிகமாக அஞ்சிக் கொண்டிருங்கள். *(கிஷ்தி நூஹ். ரூஹானி கஸாயின் தொகுதி 19 பக்கம் 12)*

*(8-வது பக்கத்தின் தொடர்ச்சி…)*

ஆசிரியராக தொண்டாற்றும் வாய்ப்பு பெற்றார். 1988 –ல் வகாலத்தே தஸ்னீஃபில் மாற்றப்பட்டார்கள். 1988 வரை பணி செய்யும் வாய்ப்பு பெற்றார்கள். பிறகு அவர்கள் ஓய்வு பெற்றார்கள். அதன் பிறகு அன்னார் ஜெர்மனியிலேயே இருந்தார்கள். ஜெர்மனியிலும் 1974 –ன் நிலைமைக்குப் பிறகு அங்கு அஹ்மதிகளை அங்கு வரவழைக்கவும், இமிக்ரேஷன் பெற்றுத் தரவும் ஆகிய பணிகளைச் செய்து வந்தார்கள். ஹஸ்ரத் மூன்றாவது கலீஃபத்துல் மஸீஹ் அன்னாரை மிகவும் பாராட்டினார்கள். அங்கு வகிக்கக்கூடிய பழைய அஹ்மதிகள் சிலர் எனக்கு எழுதியுள்ளார்கள். உதாரணமாக, இர்ஃபான் கான் சாஹிப் அவர்கள் ஒரு தந்தையைப் போன்று எங்களை அவர் கவனித்துக் கொண்டார் என்று எழுதியுள்ளார்கள். அப்போது ஜமாஅத்தின் பொருளாதார நிலையிலும் அவ்வளவு போதுமானதாக இருந்ததில்லை. எந்த அளவுக்கு எச்சரிக்கையாக இருப்பார்கள் எனில் உளூ செய்யும்போது பின்னால் நின்று தண்ணீரை வீணாக்காமல் இருப்பதற்காக கண்காணிப்பார்கள். அப்போது பெரும்பாலும் இளைஞர்களாக அங்கு வந்திருந்தார்கள். அவர்களை அன்னார் தொடர்ந்து ஜமாஅத்துடன் இணைத்து வைத்திருந்தார்கள். அவர்களுக்கு தர்பிய்யத்தும் கொடுத்து வந்தார்கள். மிகவும் தன்னிறைவு கொண்டவர். அல்லாஹ் மர்ஹூமின் தகுதியை உயர்த்துவானாக! இவர்களது சந்ததிகளுக்கும் இவரது நன்மைகளை தொடர்வதற்கு நல்வாய்ப்பு வழங்குவானாக! இவர்கள் தர்வேஷ்களின் சிறப்புகளைக் குறித்து சில நூல்களும் எழுதியுள்ளார்கள்.

மூன்றாவது ஜனாஸா மராகஸைச் சார்ந்த அப்துல்லாஹ் கஸோல் சாஹிப் அவர்களின் மகனான இப்ராஹீம் சாஹிபுடையதாகும். இவர் ஜமால் கஸோல் சாஹிபுடைய தந்தையார் ஆவார்கள். 10 மார்ச் 2017 அன்று தமது 81 –வது வயதில் வஃபாத் நிகழ்ந்தது. إِنَّا لِلّٰهِ وَإِنَّا إِلَيْهِ رَاجِعُونَ

இவர் 2000 –ம் ஆண்டில் பைஅத் செய்தார். இவரது மனைவி முதலில் பைஅத் செய்திருந்தார்கள். இவரது மனைவியே இவரை பைஅத்திற்காக ஆயத்தப்படுத்தினார். எப்போதும் M.T.A பார்த்துக் கொண்டிருப்பார். தொழுகைகளைப் பேணுபவர். திருக்குர்ஆனுடன் சிறப்பான அன்பு கொண்டவர். குடும்ப அங்கத்தினருடன் மிகவும் பரிவுடன் நடப்பவர். மிகவும் மென்மையானவர். குழந்தைகளுக்கு தர்பிய்யத் கொடுப்பதில் ஒருபோதும் கடுமை காட்டியதில்லை. குடும்பத்தை எப்போதும் ஒற்றுமையாக வைத்திருந்தார்கள். வள்ளல்தன்மை கொண்டவர். உறவினர்களுடன் நல்ல முறையில் நடந்து கொள்பவர். இவற்றில் முன்மாதிரியாக இருந்தார். பொருளாதாரத்தில் பின்தங்கியிருந்தவர்களை தமது வியாபாரத்தில் சேர்த்துக் கொண்டு அவர்களது பொருளாதாரத்தை மேம்படுத்த முயற்சி செய்வார். விருந்தோம்பல் இவரது சிறப்புப் பண்பாக இருந்தது. ஜமாஅத்தின் விருந்தினர் வரும்போது மகிழ்ச்சி அடைவார். இளமையிலேயே மிகவும் நம்பிக்கை உடையவர் என்று புகழப்பட்டவராக இருந்தார். சிறு வயதிலிருந்தே எவரிடம் வேலை செய்து வந்தார்களோ அவர்கள் தமது எல்லா பொருள்களையும் இவர் பொறுப்பில் விட்டு விடுவார்கள். அதனைப் பார்த்து இவரது உடன் இருக்கும் வியாபாரிகள் வியந்து போவார்கள். இறுதிக் காலத்தில் நோயுற்ற நிலையில் மீண்டும் மீண்டும் தொழுகையைப் பற்றி விசாரித்து வந்தார். அல்லாஹ் இவரது தகுதியை உயர்த்துவானாக! இவரது உறவினர்களுக்கு பொறுமையையும் தைரியத்தையும் வழங்குவானாக! கிலாஃபத் மற்றும் ஜமாஅத்துடன் தொடர்புடன் இருக்கச் செய்வானாக!

★ ★ ★ ★ ★

பிரிண்டர் மற்றும் பப்ளிஷரான ஜமீல் அஹ்மது நாஸிர் அவர்கள் காதியானிலுள்ள ஃபஸ்லே உமர் அச்சகத்தில் அச்சிட்டு காதியானிலுள்ள பதர் பத்திரிகை அலுவலகம் மூலம் இதனை வெளியிட்டுள்ளார்.
Proprieter Nigran Badar Board Qadian

# ஜுமுஆ பேருரை

முஸ்லிம் நாடுகளில் தீவிரவாதம் மிக அதிகமாக உள்ளது. மேலும் இங்கு தாக்குதலும் நடத்தப்படுகிறதுதான். இன்னொருபுறம் பார்த்தால் இந்த தீவிரவாத குழுக்களுக்கு முஸ்லிம் நாடுகளில் கிளர்ச்சிகள் செய்பவர்களுக்கு ஆயுதங்கள் மேல் நாடுகளிலிருந்தே கிடைக்கின்றன. தமது நோக்கங்களை அடைவதற்கு இஸ்லாத்திற்கு எதிராக உள்ள காழ்ப்புணர்ச்சியை வெளிப்படுத்துவதற்காக சில சக்திகள் மிகவும் எச்சரிக்கையாக இந்த அமைப்புகளை ஏற்பாடு செய்துள்ளனர். ஒருபுறம் ஆட்சியாளர்களுக்கு வெளிப்படையாகவும், மறைமுகமாகவும் உதவி செய்யப்படுகிறது. மற்றொருபுறம் கிளர்ச்சியாளர்களுக்கும் தீவிரவாதிகளுக்கும் ஏதாவது ஒரு வகையில் உதிவி செய்யப்படுகிறது. இந்த உதவி இல்லையெனில் எந்தவொரு அமைப்பும், அரசும் இத்தனை நீண்ட காலத்திற்குச் சண்டையிட இயலாது.

துரதிஷ்டவசமாக முஸ்லிம்களுக்கு எப்போது இழப்பு ஏற்பட்டாலும் முஸ்லிம்களின் செயல்கள், சூழ்ச்சிகள், கிளர்ச்சிகள், ஒருவர் மற்றவரின் உரிமையை வழங்காமல் இருத்தல், சொந்த நலன்களுக்கு சமூக நலனின் மீது முன்னுரிமை வழங்குதல் ஆகியவற்றின் காரணமாகவே அது ஏற்பட்டுள்ளது. இஸ்லாமிய போதனையை மறந்து விடுதல், தமது நோக்கத்தை அலட்சியம் செய்தல் ஆகியவற்றின் மூலமே இந்த இழப்பு வந்து சேர்ந்துள்ளது.

ஆனால் தற்காலத்தில் அல்ஜீரியாவில் இந்த அநீதி அதிமாகி உள்ளது. போலீஸ் அஹ்மதிகளை சிறைப் பிடிக்கிறது. நீதிமன்றங்கள் தமது மனம்போல் தீர்ப்பு சொல்லி அஹ்மதிகளை சிறையில் இடுகின்றனர். சிலருக்கு ஒரு வருடத்திலிருந்து மூன்று வருடங்கள் வரை சிறைத் தண்டனை கிடைத்துள்ளது. நாங்கள் வரக்கூடிய இமாமை ஏற்றுக் கொண்டோம் என்று சொன்ன ஒரே காரணத்திற்காகவும் அல்லாஹ் மற்றும் அவனது ரஸூல் (ஸல்) அவர்களுடைய வழிகாட்டலும் இதுதான்; அதனால் ஏற்றுக் கொண்டோம் என்று கூறியதனாலும் அவர்களுக்கு இந்த தண்டனை கிடைத்துள்ளது.

---

இஸ்லாத்தின் பெயரால் அநீதியிழைப்பவர்கள், அல்லாஹ் மற்றும் அவனது ரஸூலின் பெயரால் அநீதியிழைப்பவர்கள் நினைவில் கொள்ளுங்கள். அல்லாஹ் அநீதிக்குள்ளானவர்களைப் பார்க்கிறான். அநீதிக்குள்ளானவரின் துஆ அல்லாஹ்வுடைய அரியணையைச் சென்றடைகிறது. இந்த அநீதியிழைப்போருக்கு அவனுடைய நீதிமன்றத்தில் தீர்ப்பு கூறப்பட்டு விட்டால் அநீதி இழைக்கின்ற இவர்களுக்கு உலகமும் இருக்காது; மறுமையும் இருக்காது. ஆகவே இவர்கள் அல்லாஹ்வின் நியதியைக் குறித்து அச்சப்பட வேண்டும்.

தப்லீகிற்காகவும், இஸ்லாத்தின் அழகிய போதனையைப் பரப்பவும் இஸ்லாமிய கட்டளைகளின் ஞானங்களை கூறுவதற்காகவும் ஆதாரத்துடன் பேசுவது அவசியமாகும். பெயர் தாங்கி ஆலிம்களும், தீவிரவாதிகளும் இக்காலத்தில் செய்து கொண்டிருப்பது போன்றல்ல. வாளினால் இஸ்லாத்தைப் பரப்புமாறு அல்லாஹ் எங்கும் கூறவில்லை.

நாம் தப்லீக் செய்து இஸ்லாத்தின் அமைதி நிறைந்த போதனைகளை உலகிற்கு கூறும்போது இஸ்லாமிய எதிர்ப்பு சக்திகள் நமக்கு இவ்வாறுதான் பதில் தருகின்றன. சரி தான். நீங்கள் அமைதி நிறைந்தவர்களாக இருக்கிறீர்கள். ஆனால் உங்களைத்தான பெரும்பாலான முஸ்லிம்கள் முஸ்லிமாகவே கருதுவதில்லையே? எனவே நீங்கள் இஸ்லாத்தின் பிரதிநிதிகளாக முடியாது என்று அவர்கள் கூறுகின்றனர். ஆக இந்நிலையில் நமது சவால் இன்னும் அதிகமாகிறது. ஒவ்வோர் அஹ்மதியும் இது தொடர்பாக தமது பொறுப்பை உணர்வது அவசியமாகும். அவரது ஒவ்வொரு செயலும் நடவடிக்கையும் இஸ்லாத்தின் முன்மாதிரியாக இருக்க வேண்டும். தப்லீக் செய்யாவிட்டாலும் அவரது சொல்லும் செயலும் இஸ்லாத்தின் தூதுச் செய்தியை எடுத்துச் சொல்வதாக இருக்க வேண்டும். ஒவ்வோர் அஹ்மதியும் தத்தமது வட்டத்தில் இவ்விஷயத்தில் பணியாற்ற வேண்டும்.

---

இஸ்லாமிய போதனையின் உண்மையும் கூட இம்மக்களுள் பெரும்பாலாருக்குத் தெரியவில்லை. எனவே நாம் எல்லா இடத்திலும் எங்கெல்லாம் தாக்கத்தை ஏற்படுத்தும் அளவுக்கு தூதுச் செய்தியை எட்ட வைக்கும் பணியை செய்ய முடிகிற அளவுக்கு நமது எண்ணிக்கை இருக்குமோ அங்கு தமது தப்லீக் திட்டத்தில் இஸ்லாத்தின் உண்மையான போதனையை எடுத்து வைத்து தாக்கத்தை விளைவிக்கும் திட்டத்தையும் செயல்படுத்த வேண்டும். எங்கெல்லாம் இஸ்லாத்திற்கு எதிரான சக்திகள் ஓங்கிக் கொண்டிருக்கிறதோ அந்த நாடுகளில் அந்த வீச்சை உடைப்பதற்கு முயற்சி செய்ய முடியும் என்றால், ஒழுங்கமைக்கப்பட்ட ஒரு முயற்சி செய்ய முடியும் என்றால், அதனை அஹ்மதிய்யா ஜமாஅத் மட்டுமே செய்ய முடியும். மற்ற முஸ்லிம்கள் இஸ்லாத்தின் அழகிய போதனையை வெளிப்படுத்துவது மற்றும் இஸ்லாத்தின் தூதுச் செய்தியை கொண்டு சேர்க்கும் பணியைச் செய்யவே முடியாது. ஏனெனில் அதற்கான அமைப்பும் அவர்களிடம் இல்லை. அதற்கான அறிவும் அவர்களிடம் இல்லை. இந்தப் பணியை ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுடன் இணைந்திருப்பவர்கள் மூலமே செய்யப்பட வேண்டும் என்று விதிக்கப்பட்டுள்ளது. ஆகவே இவ்விஷயத்தில் முக்கியத்துவத்தை நாம் புரிய வேண்டும்.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகிறார்கள்: இஸ்லாத்தின் பாதுகாப்பு மற்றும் உண்மையை வெளிப்படுத்துவதற்கு முதலில் நீங்கள் உண்மையான முஸ்லிமின் முன்மாதிரியாகிக் காட்டுவது எல்லாவற்றிலும் முதல் அம்சமாகும். இரண்டாவது அம்சம், இதன் சிறப்பு மற்றும் முழுமைகளை உலகில் பரப்புங்கள்.

அல்லாஹ் நமக்கு இதற்கான வாய்ப்பினை தருவானாக! நாம் நமது வாழ்வை இதற்கேற்ப அமைப்பவர்களாவோமாக! உண்மையான முஸ்லிம்களின் முன்மாதியைக் காட்டுவோமாக! இந்த எல்லா வகையான எதிர்ப்புக்கிடையிலும் இஸ்லாத்தின் சிறப்பு மற்றும் முழுமைகளை உலகில் பரப்புவர்களாவோமாக! உண்மையான இஸ்லாத்தின் பாதுகாப்பு மற்றும் உண்மையை வெளிப்படுத்துவர்களில் நம்மில் ஒவ்வொருவரும் ஆகி விடுவோமாக!

---

காதியானைச் சார்ந்த மதிப்பிற்குரிய மவ்லானா ஹகீம் முஹம்மது தீன் சாஹிப் அவர்களும், ஜெர்மனியைச் சார்ந்த மதிப்பிற்குரிய ஃபஸ்லே இலாஹி நூரி சாஹிப் அவர்களும், மராகஸைச் சார்ந்த அப்துல்லாஹ் கஸோல் சாஹிப் அவர்களின் மகனான மதிப்பிற்குரிய இப்ராஹீம் சாஹிப் அவர்களும் வஃபாத் ஆகி விட்டார்கள். மர்ஹூம்களின் நன்மைகள் எடுத்துக் கூறப்பட்டு அவர்களுக்காக ஜனாஸா காயிப் தொழுகையும் நிறைவேற்றப்பட்டது.

## சய்யிதுனா அமீருல் முஃமினீன் ஹஸ்ரத் மிர்ஸா மஸ்ரூர் அஹ்மது ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ்

(அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் **இலண்டன் மார்டனிலுள்ள பைத்துல் ஃபுதூஹ் பள்ளிவாயிலில்**

**17 மார்ச் 2017** அதாவது ஹிஜ்ரி ஷம்ஸி 1396 -ஆம் ஆண்டு **அமான்** மாதம் **17 -ஆம் தேதி** ஆற்றிய **ஜுமுஆ பேருரை**

أَشْهَدُ أَنْ لَّا إِلٰهَ إِلَّا اللّٰهُ وَحْدَهٗ لَا شَرِيْكَ لَهٗ وَأَشْهَدُ أَنَّ مُحَمَّدًا عَبْدُهٗ وَ رَسُوْلُهٗ

أَمَّا بَعْدُ فَأَعُوْذُ بِاللّٰهِ مِنَ الشَّيْطٰنِ الرَّجِيْمِ - بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ

اَلْحَمْدُ لِلّٰهِ رَبِّ الْعٰلَمِيْنَ. اَلرَّحْمٰنِ الرَّحِيْمِ. مٰلِكِ يَوْمِ الدِّيْنِ. إِيَّاكَ نَعْبُدُ

وَ إِيَّاكَ نَسْتَعِيْنُ. اِهْدِنَا الصِّرَاطَ الْمُسْتَقِيْمَ. صِرَاطَ الَّذِيْنَ أَنْعَمْتَ عَلَيْهِمْ

غَيْرِ الْمَغْضُوْبِ عَلَيْهِمْ وَلَا الضَّآلِّيْنَ.

இக்காலத்தில் நாம் பார்க்கிறோம். மேற்கத்திய முன்னேற்றமடைந்த நாடுகளில் வலதுசாரிகளின் அல்லது சமூக, மத, இனவாத அரசியல்வாதிகள் மற்றும் கட்சிகள் மிகவும் வளர்ந்து கொண்டே செல்கின்றன. அவர்களின் முக்கியத்துவம் அதிகமாகிக் கொண்டிருக்கிறது. விமர்சகர்களும் கூட இது குறித்து அதிகமாக எழுதுகிறார்கள். தற்போதைய இடதுசாரி அரசுகள் என்று கூறப்படுபவை குடியேற்றக் கொள்கைகளில் (Imigration Policies) கடுமை இல்லாதவர்களால் இந்த அனைத்து சம்பவங்களும் நடைபெறுகின்றன. இது தவிர சில காரணங்கள் உள்ளன. ஆனால் இந்த அனைத்து கெட்ட விஷயங்களும் முஸ்லிம்கள் மீது வந்து விழுகின்றன.

முஸ்லிம்கள் இந்த நாடுகளுக்கு வருவதற்கு தடை விதிக்க வேண்டும். ஏனெனில் அவர்கள் நம்முடன் ஒத்துப் போவதில்லை. தனியாகவே இருக்கின்றனர். அவர்களின் மார்க்கத்தில் அதாவது அவர்களின் கொள்கையின்படி தீவிரவாத மார்க்கத்தின்படி செயல்பட விரும்புகின்றனர் என்றும், பிறகு இவர்களுக்கு (முஸ்லிம்களுக்கு) இங்கு வசிக்கும் போது அவர்தம் வாழ்க்கை முறையை விட்டு விட்டு நமது வாழ்க்கை நடைமுறைகளைப் பின்பற்ற வேண்டும். அவ்வாறு அவர்கள் செய்யவில்லை என்றால் அவர்கள் நம்முடன்

இணைய விரும்பவில்லை என்று பொருள் ஆகிறது. பிறகு தமது தனித்தன்மையையும் தமது மார்க்க உணர்வையுமே நிலைநாட்ட விரும்புகிறார்கள் என்றால் அவர்கள் நமது நாட்டிற்கு ஆபத்தானவர்கள் என்று பொருள் என்றும் கூறப்படுகிறது. இவை மிகவும் முட்டாள்தனமான கருத்துக்கள் ஆகும். முஸ்லிம்களின் பள்ளிவாயிலின் மினாராக்கள் நமக்கு ஆபத்தானது. அவர்களின் பெண்களின் திரை நமக்கு ஆபத்தானது. அவர்கள் (முஸ்லிம் ஆண்கள்) பெண்களுடன் கை குலுக்காமல் இருப்பது அல்லது பெண்கள் ஆண்களுடன் கை குலுக்காமல் இருப்பது நமக்கு ஆபத்தாகும் என்பதெல்லாம் முட்டாள்தனமான கருத்துக்களாகும்.

இங்கு யூ.கே –வில் அரசியல்வாதிகள் ஆங்காங்கே சிலர் இவ்வாறு கூறினாலும் மற்ற நாடுகளில் இது மிகவும் அதிகமான கூச்சலாக உள்ளது. ஒவ்வொரு நாளும் இது சம்பந்தமான அரசியல்வாதிகளின் பேட்டிகள் வெளி வருகின்றன. பாருங்கள். முஸ்லிம்கள் நம்மைப் பொருத்தவரை ஆபத்தானவர்கள் என்பது இதன் மூலமும் கூட நிரூபணமாகிறது. முஸ்லிம் நாடுகளில் தீவிரவாதமும் சட்ட ஒழுங்கு சீர்கேடு –களும் எல்லையைத் தொட்டுள்ளன என்று ஆதாரமும் வேறு தருகிறார்கள். தீவிரவாத தாக்குதல்கள் இங்கும் கூட முஸ்லிம்கள் தரப்பிலிருந்துதான் அதிகமாக நடைபெறுகின்றன என்கின்றனர். மற்ற விஷயங்களைப் பொருத்தவரையில் இஸ்லாத்திற்கு மாறுபட்ட கருத்தை உடையவர்கள்தான் துரதிஷ்ட –வசமாக இவர்களின் இந்தக் கருத்து சரியாகவே உள்ளது. அதாவது, முஸ்லிம் நாடுகளில் தீவிரவாதம் உள்ளது. இங்கும் தாக்குதல்கள் நடக்கின்றன என்கின்றனர். ஆகவே இந்த ஆட்சேபனையும் கூட முஸ்லிம்களின் சார்பாக இவர்களின் கையில் தரப்பட்டவையேயாகும்.

நான் கூறியதுபோன்று முஸ்லிம் நாடுகளில் தீவிரவாதம் மிக அதிகமாக உள்ளது. மேலும் இங்கு தாக்குதலும் நடத்தப்படுகிறதுதான். இன்னொருபுறம் பார்த்தால் இந்த தீவிரவாத குழுக்களுக்கு முஸ்லிம் நாடுகளில் கிளர்ச்சிகள் செய்பவர்களுக்கு ஆயுதங்கள் மேல் நாடுகளிலிருந்தே கிடைக்கின்றன. தமது நோக்கங்களை அடைவதற்கு இஸ்லாத்திற்கு எதிராக உள்ள காழ்ப்புணர்ச்சியை வெளிப்படுத்து –வதற்காக சில சக்திகள் மிகவும் எச்சரிக்கையாக இந்த அமைப்புகளை ஏற்பாடு செய்துள்ளனர். ஒருபுறம் ஆட்சியாளர்களுக்கு வெளிப்படையாகவும், மறைமுக –மாகவும் உதவி செய்யப்படுகிறது. மற்றொருபுறம் கிளர்ச்சியாளர்களுக்கும் தீவிரவாதிகளுக்கும் ஏதாவது ஒரு வகையில் உதிவி செய்யப்படுகிறது. இந்த உதவி இல்லையெனில் எந்தவொரு அமைப்பும், அரசும் இத்தனை நீண்ட காலத்திற்குச் சண்டையிட இயலாது. துரதிஷ்டவசமாக முஸ்லிம்களுக்கு எப்போது இழப்பு ஏற்பட்டாலும் முஸ்லிம்களின் செயல்கள், சூழ்ச்சிகள், கிளர்ச்சிகள், ஒருவர் மற்றவரின் உரிமையை வழங்காமல் இருத்தல், சொந்த நலன்களுக்கு சமூக நலனின் மீது முன்னுரிமை வழங்குதல் ஆகியவற்றின் காரணமாகவே அது ஏற்பட்டுள்ளது.

இஸ்லாமிய போதனையை மறந்து விடுதல், தமது நோக்கத்தை அலட்சியம் செய்தல் ஆகியவற்றின் மூலமே இந்த இழப்பு வந்து சேர்ந்துள்ளது. அவர்கள் தமது ஆன்மீக நிலையை முன்னேற்றமடையச் செய்வதற்குப் பதில், அல்லாஹ் மற்றும் அவனது தூதரைப் பின்பற்றுவதற்கு பதில் உலகியல் பேராசை, பொலிவு, நோக்கங்கள், ஆட்சியாளர்கள், அரசியல் –வாதிகள், மார்க்க அறிஞர்கள் ஆகியோருக்கு முன்னுரிமை வழங்குபவர்களாக ஆகி விட்டனர். மார்க்க அறிஞர்கள் சமுதாயத்தை மேலும் இருளின் பாதாளத்தில் தள்ளுவதில் தமது பங்களிப்பை மார்க்கத்தின் போர்வையில் ஆற்றுகின்றனர். காலத்தின் நிலைமையைப் பார்த்து அல்லாஹ்வின் வாக்குறுதியை கண் முன் நிறுத்தி இக்கால நிலைமையின் எதிர்ப்பார்ப்பை பற்றி ஆய்வு செய்வதற்கு பதில், இந்தக் காலத்தில் நாம், அல்லாஹ் முன்னரே கூறியபடி, ஈமானை கார்த்திகை நட்சத்திரத்திலிருந்து திரும்பக் கொண்டு வந்து முஸ்லிம்களின் ஈமானை திரும்பவும் நிலைநாட்டு –பவரைத் தேடுவதற்குப் பதில் அதில் கவனமற்றவர் –களாக இருப்பதோடு மட்டுமின்றி அல்லாஹ்வால் அனுப்பப்பட்டவரை எதிர்ப்பதில் எந்த அளவுக்கு இவர்கள் முன்னேறி விட்டார்கள் என்றால் உலகின் எல்லா நாடுகளிலும் முஸ்லிமல்லாத நாடுகளிலும் சென்று காழ்ப்புணர்ச்சியில் எல்லையையே தொட்டவர்களாக எந்த அளவுக்கு அநீதியிழைத்தார்கள் என்றால் அதில் ஓர் எல்லையே இல்லை. மாறாக, அல்லாஹ் தனது வாக்குறுதிக்கேற்ப அனுப்பியவரை ஏற்றுக் கொண்டவர்கள் மீதும் அநீதி மற்றும் வரம்பு மீறலின் எல்லைக்குச் சென்று விட்டார்கள். பாகிஸ்தானில் சட்டத்தின் போர்வையிலேயே இந்த அநீதி மற்றும் வரம்பு மீறல் சூடுபிடித்துள்ளது. அங்கு பல வருடங்களாக இன்னும் சொல்லப்போனால் பல Decades (பத்து வருடங்களாக) இது நடந்து வருகிறது.

இன்னும் சில இஸ்லாமிய நாடுகளிலும் முல்லாக்களின் பயத்தாலும், அநீதியிழைக்கும் அதிகாரிகளின் காரணத்தாலும் அஹ்மதிகள் பல பிரச்சனைகளுக்கு இரையாகி வருகிறார்கள் அல்லது பிரச்சனைகளைச் சந்திக்க வேண்டியுள்ளது. சில இயக்கங்களில் முன்னரை விட நிலைமை சற்று சீரடைந்துள்ளது. எவ்வளவு காலம் இருக்கும்? என்று தெரியவில்லை. அல்லாஹ் அருள் புரிவானாக! நிரந்தரமாக அவ்வாறிருக்கட்டுமாக! அஹ்மதிகள் பாதுகாப்பாக இருப்பார்களாக! ஆனால் தற்காலத்தில் அல்ஜீரியாவில் இந்த அநீதி அதிமாகி உள்ளது. போலீஸ் அஹ்மதிகளை சிறைப் பிடிக்கிறது. நீதிமன்றங்கள் தமது மனம்போல் தீர்ப்பு சொல்லி அஹ்மதிகளை சிறையில் இடுகின்றனர். சிலருக்கு ஒரு வருடத்திலிருந்து மூன்று வருடங்கள் வரை சிறைத் தண்டனை கிடைத்துள்ளது. நாங்கள் வரக்கூடிய இமாமை ஏற்றுக் கொண்டோம் என்று சொன்ன ஒரே காரணத்திற்காகவும் அல்லாஹ் மற்றும் அவனது ரஸூல் (ஸல்) அவர்களுடைய வழிகாட்டலும் இதுதான்; அதனால் ஏற்றுக் கொண்டோம் என்று கூறியதனாலும் அவர்களுக்கு இந்த தண்டனை கிடைத்துள்ளது. சிறைத் தண்டனை கிடைத்து சிறையில் இருப்பவர்கள் அல்லது தண்டனையை எதிர்பார்த்து போலீஸ் கஷ்டடியில் இருப்பவர்கள் அல்லது சிறை பிடிக்கப்பட்டவர் ஆகியோரின் எண்ணிக்கை 200 –ஐ விட அதிகமாகும். இவர்கள் அனைவரும் இந்த அனைத்து கடுமைகளுக்கும் பிறகு கூட எவ்வளவு கடுமையை எங்கள் மீது காட்டினாலும் நாங்கள் எமது ஈமானில் இருந்து பின்வாங்கப் போவதில்லை என்பதை வெளிப்படுத்திக் கொண்டிருக் –கிறார்கள். நான் அல்லாஹ் மற்றும் அவனது ரஸூல் (ஸல்) அவர்கள் ஆகியோர்களுக்கு எல்லாவற்றையும் விட முன்னுரிமை தருவேன் என்றும், அதற்காக எவ்வளவு பெரிய தியாகம் செய்ய வேண்டிவந்தாலும் செய்வேன் என்றும் ஓர் அஹ்மதி பிரகடனம் செய்த பிறகு, அவரை அவரது ஈமானிலிருந்து எதுவும் அசைக்க முடியாது. ஆனால் இஸ்லாத்தின் பெயரால் அநீதியிழைப்பவர்கள், அல்லாஹ் மற்றும் அவனது ரஸூலின் பெயரால் அநீதியிழைப்பவர்கள் நினைவில் கொள்ளுங்கள். அல்லாஹ் அநீதிக்குள்ளானவர் –களைப் பார்க்கிறான். அநீதிக்குள்ளானவரின் துஆ அல்லாஹ்வுடைய அரியணையைச் சென்றடைகிறது. இந்த அநீதியிழைப்போருக்கு அவனுடைய நீதிமன்றத்தில் தீர்ப்பு கூறப்பட்டு விட்டால் அநீதி இழைக்கின்ற இவர்களுக்கு உலகமும் இருக்காது; மறுமையும் இருக்காது.

ஆகவே இவர்கள் அல்லாஹ்வின் நியதியைக் குறித்து அச்சப்பட வேண்டும். அஹ்மதிகள் மீது அநீதியிழைப்பதற்குப் பதில் தமது நிலைமைகளைப் பார்க்க வேண்டும். இஸ்லாத்தின் அழகிய போதனைக்கு அவப்பெயர் ஏற்படுத்திக் கொண்டிருப்பதைப் பார்க்கட்டும். இதனையா இவர்களின் வாழ்வின் நோக்கமாக அல்லாஹ் கூறியுள்ளான்? எந்த மார்க்க அறிஞர்களுக்குப் பின்னால் ஆட்சியாளர்களும் நீதிமன்றத்தின் நீதிபதிகளும் செல்கின்றனரோ இவர்கள் இஸ்லாத்தின் மீது வேதனை கொண்டவர்களாக இருந்தால் இஸ்லாத்தின் மீது ஆட்சேபனை செய்யப்பட்டுக் கொண்டிருக்கிற நிலையில் எல்லா மார்க்க அறிஞர்களும் ஒன்றிணைந்து சிந்தித்து இருக்க வேண்டும். அல்லாஹ்வின் வாக்குறுதி முழு உலகிலும் இஸ்லாத்தை பரப்புவதாக இருக்கிறது. ஆனால் இங்கோ தலைகீழாக இஸ்லாம் அவப்பெயருக்கு உள்ளாகிறதே என்ன காரணம்? தீவிரவாத அமைப்புகள் மூலமா வெற்றிக் கிடைக்கப்போகிறது? கொலை எல்லாம் செய்தாவது இஸ்லாத்தைப் பரப்புங்கள் என்றா அல்லாஹ் கூறினான்? இஸ்லாத்திடம் ஆதாரங்களும் அத்தாட்சிகளும் இல்லையா? அதனைக் கொண்டு இஸ்லாத்தை பரப்புவதற்கு? மாற்றுக் கருத்துக் கொண்ட அணியினரின் அப்பாவி குழந்தைகளையும் பெண்களையும் முதியவர்களையும் வாளால் கொன்று குவித்துதான் இஸ்லாத்திற்கு தொண்டு செய்ய வேண்டுமா? பெரும்பாலான மார்க்க அறிஞர்களின் தீவிரவாத செயலிலிருந்து இதுதான் தென்படுகிறது. இதுதான் இவர்களின் சிந்தனையாகவும் உள்ளது. பிறகு இவர்கள் அல்லாஹ் மற்றும் அவனது ரஸூலின் கட்டளைக்கு மாறு செய்பவர்கள் ஆவர். இவர்களுக்கு வெற்றியே கிடைக்கப் போவதில்லை. அத்தகைய செயல் கண்டிப்பாக அல்லாஹ்வின் பிடிக்குக் காரணமாக அமையலாம். அஹ்மதிகளின் மீது அநீதியிழைத்து இஸ்லாத்தின் பெயரால் தவறான விஷயங்களைச் செய்து தமது அரசாங்கத்தின் ஆற்றல்களை நம்பி இதுதான் நமது வெற்றி என்று நினைக்கிறார்கள் என்றால், ஒருநாள் அல்லாஹ்வின் முன்னிலையில் கொண்டு வரப்படுவதை அவர்கள் நினைவில் கொள்ள வேண்டும். அங்கு இந்த அநீதிகளுக்குப் பதிலும் தர வேண்டியது வரும். முஸ்லிம்களின் நிலையும் மிக வியக்கத்தக்கதாக உள்ளது. ஒருபுறம் பெயர் தாங்கி ஆலிம்களின் அணி அல்லது தீவிரவாதிகளின் அணி உள்ளது.

நான் கூறியதுபோன்று இவர்கள் இஸ்லாத்தின் பெயரால் தம்மவருக்கும் அன்னியர்களுக்கும் குழப்பத்தை ஏற்படுத்தியுள்ளார்கள். மற்றொருபுறம் வேறு மக்கள் உள்ளனர். அவர்கள் இதற்கு பதிலடியாக அல்லது மேற்கத்திய உலகியல் தாக்கத்தின் கீழ் மார்க்கத்துடனேயே தொடர்பில்லாமல் வாழ்கின்றனர். நம்பிக்கை வைத்து இஸ்லாமிய போதனையின் சிறப்பை எடுத்து வைப்பதற்குப் பதில் இஸ்லாத்துடன் தொடர்பு இல்லாதவர்களாக அல்லது அச்சமற்றவர் –களாக ஆகி, உலகியல்வாதிகளின் கருத்துக்களை தவறு என்று கூறுவதற்குப் பதிலாக அவர்களுக்கு ஆமாம் போடுகின்றனர். இஸ்லாமிய போதனைகளை தவறான கோணத்தில் எடுத்து வைக்கின்றனர். இதற்கு பொருள் இதுதான் என்கின்றனர். உலக பயம், அல்லாஹ்வின் பயத்தை விட இவர்களிடம் மிகைத்துள்ளது. அதுபோன்று இன்றும் சில அரசியல்வாதிகளுக்கும் ஆட்சியாளர்களுக்கும் மவ்லவிகளுடன் கருத்து உடன்பாடு இல்லா விட்டாலும் கூட தமது நாற்காலி பறிக்கப்படுவதற்குப் பயந்து மவ்லவி நமக்கு எதிராக மக்களைத் தூண்டி விட்டு விடக்கூடாதே என்று பயந்து மார்க்கத்துடன் இவர்களுக்கு எந்த தொடர்பும் இல்லாததாலும் தமது கோழைத்தனத்தாலும் தமது உலகியல் நோக்கமே அவர்களிடம் மிகைத்திருப்பதாலும் இவர்கள் மவுனமாக இருக்கிறார்கள். முஸ்லிம்களின் ஒவ்வொரு மட்டமும் அல்லாஹ்வால் அனுப்பப்பட்டவரை மறுத்து விட்டு அல்லாஹ் மற்றும் அவனது தூதரின்

கட்டளைகளில் இருந்து விலகிப் போய் விட்டனர் என்ற நிலையிலும் கூட மார்க்கத்தின் பெயரால் தமது கடையை அலங்கரிக்க நினைக்கும் இந்த மவ்லவிகள் – நவூதுபில்லாஹ் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் மஸீஹ் மவ்வூது என்று வாதம் செய்து ஒரு வியாபாரத்தை தொடங்கியுள்ளதாக அவதூறு கூறுகின்றனர். ஆனால் உண்மையில் இவர்கள் சுலப சம்பாத்தியம் மற்றும் தமது கடையை அலங்கரிக்கும் வழியாக ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் மீது கொண்ட எதிர்ப்பை ஏற்படுத்தி வைத்துள்ளார்கள். இவர்களிடம் ஆதாரம் எதுவும் இல்லை. அதனால் பெரும்பாலாரை பாருங்கள். ஏசத்தான் செய்கிறார்கள்.

எவ்வாறிருப்பினும், மார்க்கத்தின் பெயரால் இந்த கடை நடத்தும் கூட்டத்தினர் அல்லது உலகியலுக்காக மார்க்கத்தை இரண்டாம்பட்ச –மாக்கியவர்கள் அனைவரும் பெயரளவில் முஸ்லிம்களாவர். இஸ்லாத்தின் உண்மையான போதனையுடன் எந்தத் தொடர்பும் இல்லை. அத்தகைய நிலையில் அஹ்மதிகள் சிந்திக்க வேண்டும். அவர்கள் காலத்தின் இமாமை ஏற்றுள்ளார்கள். அவர்கள் மீது மிகப்பெரும் பொறுப்பு உள்ளது. எதிர்ப்பாளர்கள் அவர்கள் மீது அநீதியிழைப்பார்கள் –தான். அதேபோன்று மார்க்கத்திலிருந்து விலகியவர்கள், மார்க்கத்தையே மறுப்பவர்கள் கூட சுதந்திரத்தின் பெயரால் இவர்கள் பேசுவதையும், சட்டம் இயற்றுவதையும் கூட நாம் எதிர்க்கும்போது அவர்களும் நம்மை எதிர்ப்பார்கள். ஆகவே, இந்நிலையில் நாம் பயந்து மவுனமாகி விடுவோமா? அல்லது ஈமானில் பலவீனத்தைக் காட்டியவாறு இவர்களுக்கு ஆமாம் போடப் போகிறோமா? நாமும் அவ்வாறு செய்தால் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுடைய பைஅத்தின் கீழ் வந்ததில் என்ன பயன் உள்ளது?

அன்னார் நீங்கள் அல்லாஹ்வின் கட்டளைக்கு ஏற்ப நடக்க வேண்டும் என்று நம்மிடம் கூறியுள்ளார் –கள். நாம் நமது ஈமானையும் வீணாக்கக் கூடாது. குழப்பத்தையும் உருவாக விடக்கூடாது. அத்துடன் இதனையும் முன்னிறுத்த வேண்டும். அதாவது அல்லாஹ்வின் தூதுச் செய்தியை உலகின் எல்லை வரை எட்ட வைக்கவும் வேண்டும். அதன் மூலம் தவ்ஹீது நிலைநாட்டப்பட வேண்டும். இஸ்லாத்தின் அழகிய போதனை உலகில் பரவ வேண்டும். உலகின் பெரும்பாலார் அதனையும் ஏற்க வேண்டும்.

ஹுஸூர் (அலை) அவர்கள் கூறினார்கள்: இதற்காக அல்லாஹ் திருக்குர்ஆனில் நமக்கு வழிகாட்டியுள்ளான். அதற்கேற்ப செயல்படுங்கள். அது என்னவெனில்,

اُدْعُ اِلٰى سَبِيْلِ رَبِّكَ بِالْحِكْمَةِ وَالْمَوْعِظَةِ الْحَسَنَةِ
وَجَادِلْهُمْ بِالَّتِيْ هِيَ اَحْسَنُ

தமது இறைவனின் வழியில் ஞானத்துடனும் நல்ல அறவுரையுடன் அழைப்பீராக. மிகச்சிறந்த ஆதாரங்களுடன் வாதம் செய்வீராக. **(16:126)**

ஆக, தப்லீகிற்காகவும், இஸ்லாத்தின் அழகிய போதனையைப் பரப்பவும் இஸ்லாமிய கட்டளைகளின் ஞானங்களை கூறுவதற்காகவும் ஆதாரத்துடன் பேசுவது அவசியமாகும். பெயர் தாங்கி தீவிரவாதி –களும் இக்காலத்தில் செய்து கொண்டிருப்பது போன்றல்ல. வாளினால் இஸ்லாத்தைப் பரப்புமாறு அல்லாஹ் எங்கும் கூறவில்லை. உலகியல் நாடுகள், ஆட்சிகள் ஆகியவற்றில் சில செயல் நடைமுறையில் உள்ளன அல்லது சில விஷயங்களுக்கு சட்டம் பாதுகாப்பு தருகிறது. மார்க்கமோ அவற்றிற்கு அனுமதி தருவதில்லை. அத்தகைய செயல்கள் மார்க்கத்தின் கருத்தின்படி நல்லொழுக்கத்திலிருந்து வீழ்ந்த செயல்கள் மட்டுமல்லாமல் பாவங்களுமாக உள்ளன. அவற்றை நாம் சந்திக்க நேர்ந்தால், மறு தரப்பு கோபம் கொண்டால், தற்காலிகமாக அதனை விட்டு அகன்று விடலாம். ஸலாம் என்று கூறி அங்கிருந்து அகன்று விட முடியும். அந்நிலையில் இதுவே ஞானத்தின் எதிர்பார்ப்பு ஆகும். சட்டமாக்கப்பட்டுள்ள விஷயம் அல்லது எதிர் தரப்பு கோபப்படுகிறது. எனவே நாம் ஆமாம் போட்டு விட்டு விடலாம் என்பதன்று. பயந்துபோய் அல்லது உலகியல் தாக்கத்திற்கு ஆளாகி ஆமாம் போடுவது தவறாகும். பிறகு அது பாவமாகி விடும்.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்: ‟ஜாதிலு ஹும்முல்லதி ஹிய அஹ்ஸனு என்ற வசனத்திற்கு ஆமாம் போட்டவாறு உண்மைக்கு மாற்றமான விஷயத்தையும் உண்மைப்படுத்த வேண்டும் என்று பொருளல்ல”. (திர்யாக்குல் குலூப். ரூஹானி கஸாயின் தொகுதி 15 பக்கம் 305, அடிக்குறிப்பு)

ஹிக்மத் என்பது இவ்வாறு கோழைத்தனம் காட்டுவது என்பதல்ல. மாறாக உண்மையான கருத்தை குழப்பம் ஏற்படாதவாறு கூறுவது ஹிக்மத் ஆகும். எத்தகைய நடைமுறையை கையாள வேண்டும் எனில் அதன் மூலம் குழப்பம் ஏற்படாமல் இருக்க வேண்டும். மேலும் சொல்ல வேண்டிய கடமை நிறைவேறவும் வேண்டும்.

ஆக, நம்பிக்கை கொண்ட ஒருவர் இதனை கருத்தில் கொள்ள வேண்டும். கோழைத்தனம் மற்றும் ஹிக்மத் இரண்டிற்கும் இடையில் என்ன வித்தியாசம் என்று தெரிய வேண்டும். இஸ்லாத்தின் தெளிவான கட்டளையின் அடிப்படையில் இஸ்லாம் தவறு என்று கூறுவதை நாம் செய்யக் கூடாது. அதனை தவறு என்றே கூற வேண்டும். அத்துடன் சட்டத்தை கையில் எடுத்துக் கொண்டு சண்டை போடவும் கூடாது.

பிறகு ஓரிடத்தில் இதனை மேலும் தெளிவுபடுத் –தியவாறு ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்: எவருடனாவது வாக்குவாதம் செய்தால் ஞானம் மற்றும் நற்போதனையுடன் வாக்குவாதம் செய்யுங்கள். அது மென்மையாகவும் நாகரீகமாகவும் இருக்க வேண்டும். ஆம் இது உண்மை. இக்காலத்தின் அறிவற்ற மூட மவ்லவிகள் தமது முட்டாள்தனத்தால் இவ்வாறு மார்க்கத்தைப் பரப்புவதற்காக வாளெடுத்தல் மிகவும் நற்கூலியைப் பெற்றுத் தரும் விஷயம் என்று கருதுகின்றனர். அவர்கள் திரை மறைவில் ஒரு நயவஞ்சக வாழ்வு வாழ்கின்றனர். ஆனால், அவர்கள் தமது கருத்தில் கடும் தவற்றில் இருக்கிறார்கள். இவர்களின் தவறான எண்ணத்தினால் இறை வேதத்தின் மீது பழி வரலாம். அத்தகைய விஷயத்தைச் செய்வது அவர்களின் தவறாகும். ஆனால் அதனால் இறை வேதத்தின் மீது பழி விழுகிறது.

ஹுஸூர் (அலை) அவர்கள் கூறினார்கள்: உண்மை –யில் யதார்த்தமான உண்மையானது நிர்பந்தத்தின் தேவை இருக்கிறது என்பதல்ல. மாறாக, பலவந்தம் என்பது ஆன்மீக ஆதாரம் அதில் பலவீனமாக உள்ளது என்பதற்குச் சான்று கூறுகிறது. இறைவனும் அவனது தூய தூதர் (ஸல்) அவர்கள் மீது இவ்வாறு வஹியை இறக்கினான். فَاصْبِرْ كَمَا صَبَرَ اُولُوا الْعَزْمِ எல்லா உறுதிவாய்ந்த எண்ணமுள்ள தூதர்களும் காட்டிய அனைத்துப் பொறுமைகளுக்கும் சமமான பொறுமை செய்வீராக! **(46:36)** நபிமார்கள் அனைவரின் பொறுமையையும் ஒன்றிணைத்தாலும் உமது பொறுமையை விட அதிகமாக இருக்கக் கூடாது. பிறகு (இறைவன்) கூறினான்: لَآ اِكْرَاهَ فِى الدِّيْنِ அதாவது மார்க்கத்தில் பலவந்தம் கூடாது. **(2:257)**

பிறகு கூறினான்:

اُدْعُ اِلٰى سَبِيْلِ رَبِّكَ بِالْحِكْمَةِ وَالْمَوْعِظَةِ الْحَسَنَةِ

அதாவது ஞானம் மற்றும் நற்போதனையுடன் விவாதம் செய்யுங்கள். கடுமையான முறையில் அல்ல. பிறகு கூறினான்: وَالْكٰظِمِيْنَ الْغَيْظَ وَالْعَافِيْنَ عَنِ النَّاسِ அதாவது நம்பிக்கை கொண்டவர் கோபத்தை விழுங்குபவரும் அநீதியின் இயல்பு கொண்ட மக்களை மன்னிப்பவரும் ஆவர். வீணாணவற்றிற்கு வீணாணவற்றைக் கொண்டு பதில் தரக் கூடாது.

அத்தகைய இறைவன், மார்க்கத்தை மறுப்பவரை கொன்று விடுங்கள்; அவர்களது பொருள்களைக் கொள்ளையடியுங்கள்; அவர்களது வீடுகளைச் சேதமாக்கி விடுங்கள் என்று போதனை தந்துள்ளானா? மாறாக, இஸ்லாத்தின் ஆரம்ப கட்ட நடவடிக்கைகள் இறைக் கட்டளைக்கேற்பவும், மேலும் இந்த அளவுக்கே ஆகும். அதாவது அநீதியான முறையில் வாளெடுத்தவர்கள் வாளினாலேயே அழிக்கப்பட்டனர். அவர்கள் என்ன செய்தார்களோ அதனாலேயே தமது முடிவைப் பெற்றனர். வாளினால் மறுப்பவர்களைக் கொன்று விடுங்கள் என்று எங்கு எழுதப்பட்டுள்ளது? இது முட்டாள் மவ்லவிகள் மற்றும் அறிவில்லாத பாதிரிகளின் கருத்தாகும். இதில் சிறிதும் உண்மையில்லை. (தப்லீக் ரிஸாலத் மஜ்மூஆ இஷ்திஹாராத் தொகுதி 3 பக்கம் 194-196 அடிக்குறிப்பு. த.்ப்ஸீர் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அந்நஹ்ல் வசனம் 126)

இஸ்லாத்தின் கொடியைப் பிடித்துக் கொண்டு திரிகிற இந்த பெயர் தாங்கி மவ்லவிகளும் இவ்வாறு கூறுகின்றனர் அல்லது இஸ்லாத்தின் எதிரிகள் இவ்வாறு கூறுகின்றனர். அவர்கள் கூறுவது போன்று இஸ்லாத்தில் மறுப்பவர்களைக் கொன்று விடுங்கள் என்று எங்கும் கூறப்படவில்லை. ஆகவே இதுவே இஸ்லாமிய போதனையாகும். இதன்படி பிற முஸ்லிம்கள் செயல்படுவதில்லை அல்லது அவர்களுக்கு இஸ்லாமிய போதனையைக் கொண்டு சேர்ப்பதில் ஆர்வம் இல்லை அல்லது ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறியதுபோன்று அறிவற்ற மூட மவ்லவிகளாக இருக்கின்றனர்.

## திருக்குர்ஆனிலிருந்து

நீங்கள், உங்கள் இறைவனிடமிருந்து இறங்கக்கூடிய மன்னிப்பின்பாலும், வானங்கள், பூமி ஆகியவற்றின் மதிப்பைக் கொண்டதும் இறையச்சமுடையோருக்கு ஏற்படுத்தப்பட்டுள்ளதுமான சொர்க்கத்தின்பாலும் விரைந்து செல்லுங்கள். (3:134)

**ஜலாலுத்தீன்**
ஸயீம், மஜ்லிஸ் அன்ஸாருல்லாஹ், தூத்துக்குடி.
**Ph : +91 98409 17179**

**O.A.N. DOORS & STEELS**
**O.A.N. டோர்ஸ் & ஸ்டீல்ஸ்**
*All Types of wodden Doors, Skin Doors, Steel Doors, Membrane Doors, PVC Cup Boards, TMT Rods, Cements, Cover Blocks and Construction Chemicals*
Ambai Road, (Opp. Karuna Clinic), Kulavanikarpuram, Tirunelveli - 627 005
**O.A. NIJAM - 99947 571772**
**V.A. SAIT - 99430 30230**

## திருக்குர்ஆனிலிருந்து

(மக்களை) நன்மையின் பக்கம் அழைக்கவும் நல்லவற்றைப் போதித்து தீமையைத் தடுக்கவும் செய்யும் ஒரு கூட்டம் (எப்போதும்) உங்களிடையே இருந்து வர வேண்டும். இவர்களே வெற்றி பெறுவோர். (3:105)

**A. பஷீர் அஹ்மது**
வக்ஃபே ஜதீது செயலர், மேலப்பாளையம். **Ph : +91 98437 22215**

ஆனால் நாம் முஸ்லிம்களிடமும் முஸ்லிம் அல்லாதவர்களிடமும் இந்த போதனையை பொதுவானதாக ஆக்க வேண்டும். எனவே தத்தமது வட்டதில் ஒவ்வோர் அஹ்மதியும் இதன் பக்கம் கவனம் செலுத்த வேண்டும். ஏனெனில் முதலில் இவர்கள் மறைத்து வைத்திருந்தனர். நயவஞ்சக வாழ்வு வாழ்ந்து வந்தனர். இஸ்லாம் தீவிரவாத மார்க்கம் என்ற கொள்கையைக் கொண்டிருந்தனர். இப்போது அத்தகைய குழுக்கள் பகிரங்கமாகவே கூறுகின்றனர். பிறகு அன்னியர்களையல்ல. முஸ்லிம்கள் முஸ்லிம்களின் கழுத்தையே வெட்டுகின்றனர். இஸ்லாத்திற்கு அவப்பெயரை ஏற்படுத்துகின்றனர். அஹ்மதிகளுக்கு எதிராக இவை அனைத்தும் நடக்கின்றது. ஒரு பிரிவு மற்ற பிரிவுக்கு எதிரில் கொலைக் குற்றம் புரிகின்றது. அத்தகைய நிலையில் அஹ்மதிகளின் பணி மிகவும் அதிகமாகி விட்டது.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) கூறுகிறார்கள்: நினைவில் கொள்ளுங்கள். ஒருவர் கடுமை காட்டுகிறார்; கோபம் கொள்கிறார் என்றால், அத்தகையவரின் நாவிலிருந்து ஞானமிக்க வார்த்தைகள் ஒருபோதும் வெளிவர முடியாது. அத்தகையவர்களது உள்ளம் ஞானமிக்க வார்த்தை –களிலிருந்து விலக்கப்பட்டு விடுகிறது. கோபம் மற்றும் ஞானம் ஒன்றிணைய முடியாது.

ஹுஸூர் (அலை) அவர்கள் கூறுகிறார்கள்: கோபத்தில் மூழ்கியவரின் அறிவு முரட்டுத்தன –மாகவும் புரிதிறன் மழுங்கியதாகவும் ஆகி விடுகிறது. அவருக்கு எந்தக் களத்திலும் வெற்றியும் உதவியும் தரப்படாது. கோபம் பாதி பைத்தியமாகும். இது அதிகமாகி விட்டால் முழு பைத்தியமாகி விடுகிறது. (மல்ஃபூஸாத் தொகுதி 5 பக்கம் 126-127; 1985 ஆம் ஆண்டு பதிப்பு - இங்கிலாந்தில் அச்சடிக்கப்பட்டது) ஆகவே கோபம் மற்றும் பைத்தியம் ஆகிவிட்டால் பிறகு மனிதன் அறிவுப்பூர்வமாக பேசுவதில்லை. இதுவே நாம் அன்னியர்களிடம் பார்க்கிறோம். நமக்கு எதிரில் மவ்லவிகள் எல்லா இடத்திலும் இதைத்தான் செய்கிறார்கள். அவர்களின் இந்த செயல் இஸ்லாத்திற்கும் அவப்பெயரை ஏற்படுத்துகிறது. பிறகு நமக்கு எதிரில் மட்டுமல்ல. நாம் தப்லீக் செய்து இஸ்லாத்தின் அமைதி நிறைந்த போதனைகளை உலகிற்கு கூறும்போது இஸ்லாமிய எதிர்ப்பு சக்திகள் நமக்கு இவ்வாறுதான் பதில் தருகின்றன. சரி தான். நீங்கள் அமைதி நிறைந்தவர்களாக இருக்கிறீர்கள். ஆனால் உங்களைத்தான பெரும்பாலான முஸ்லிம்கள் முஸ்லிமாகவே கருதுவதில்லையே? எனவே நீங்கள் இஸ்லாத்தின் பிரதிநிதிகளாக முடியாது என்று அவர்கள் கூறுகின்றனர். ஆக இந்நிலையில் நமது சவால் இன்னும் அதிகமாகிறது. ஒவ்வோர் அஹ்மதியும் இது தொடர்பாக தமது பொறுப்பை உணர்வது அவசியமாகும். அவரது ஒவ்வொரு செயலும் நடவடிக்கையும் இஸ்லாத்தின் முன்மாதிரியாக இருக்க வேண்டும். தப்லீக் செய்யாவிட்டாலும் அவரது சொல்லும் செயலும் இஸ்லாத்தின் தூதுச் செய்தியை எடுத்துச் சொல்வதாக இருக்க வேண்டும்.

பிறகு தப்லீகிற்காக நாம் ஹஸ்ரத் அலி (ரலி) அவர்கள் கூறியுள்ள ஞானமிக்க விஷயத்தை முன் நிறுத்த வேண்டும். அன்னார் கூறுகிறார்கள்: ஒவ்வோர் உள்ளத்திற்கும் சில விருப்பங்களும் சாய்தல்களும் இருக்கும். எனவே ஏதாவது ஒரு வேளையில் அவர்களது பேச்சைக் கேட்கத் தயாராக இருப்பார்கள். சில வேளையில் கேட்கத் தயாராக இருப்பதில்லை. எனவே மக்களின் உள்ளங்களின் இந்த ஈர்ப்புகளின் கீழ் நுழையுங்கள். இப்போது என்ன நிலைமை என்று பாருங்கள். அதற்கேற்ப பேசுங்கள். அவர் கேட்கத் தயாராக இருக்கும் நிலையில் பேசுங்கள். (நஹ்ஜுல் பலாகா பாகம் 4 பக்கம் 470 அறிவிப்பு எண் 506 பைருத்திலுள்ள தாருல் மஃரிஃபத்தில் 2005 -ல் வெளியிடப்பட்டது) ஆகவே ஹிக்மத்தை நாம் கடைபிடிக்க வேண்டும். பிறகு ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் இவ்வாறு வழிகாட்டல் வழங்கியுள்ளார்கள். பேசும்போது சிந்தித்து சுருக்கமாகப் பேசுங்கள். அதிக வாக்குவாதம் செய்வதால் எந்தப் பயனும் ஏற்படுவதில்லை. சிறு துணுக்குகள் அல்லது நகைச்சுவை கூறுவதனால் அது நேராக காதுக்குள் போய் விடுகிறது. பிறகு எப்போதாவது வாய்ப்பு கிடைத்தால் மீண்டும் அதை செய்யுங்கள். (மல்ஃபூஸாத் தொகுதி 10 பக்கம் 119; 1985 ஆம் ஆண்டு பதிப்பு - இங்கிலாந்தில் அச்சடிக்கப்பட்டது)

இந்த விஷயங்களெல்லாம் தொடர்ந்து செய்யும் போதுதான் நடக்க முடியும். சுதந்திரத்தின் பெயரால் இறைவனது சட்டத்துடன் மோதுவது, சுதந்திரத்தின் பெயரால் நல்லொழுக்கத்திற்குப் புறம்பான காரியங்களை நல்லொழுக்கத்தின் அணியில் சேர்ப்பது ஆகியவற்றை செய்வதற்கு மார்க்க எதிர் சக்திகள் முயலுகின்றன. ஞானம் நிறைந்த வார்த்தைகளால் தொடர்ச்சியான தொடர்பு வைத்தல் மற்றும் முயற்சிகள் மூலமே அவர்களை மறுக்க முடியும்; உடைக்க முடியும். ஆஸ்திரேலியாவில் ஒரு பிரிவினர் இஸ்லாமிய எதிர்ப்பில் எந்த அளவுக்கு வந்து விட்டார்கள் என்றால் முஸ்லிம் ஆண்கள் பெண்களுடன் கை குலுக்க மாட்டார்கள் எனில் நாம் அவர்களை நாட்டை விட்டு வெளியேற்ற வேண்டும் என்கிறார்கள். ஒவ்வோர் அஹ்மதியும் தத்தமது வட்டத்தில் இவ்விஷயத்தில் பணியாற்ற வேண்டும் அல்லது திரையிடுதலுக்கு சிலர் எதிர்ப்பு காட்டுகிறார்கள். சில நாடுகளில் மஸ்ஜித் மற்றும் மினாராவுக்கு எதிர்ப்பு தெரிவிக்கிறனர்.

ஹாலாந்திலுள்ள ஓர் அரசியல்வாதி கூறுகிறார்: எல்லா முஸ்லிம்களையும் இந்த நாட்டிலிருந்து வெளியேற்றுங்கள் அல்லது குறிப்பிட்ட நாட்டில் முஸ்லிம்களை இங்கிருந்து வெளியேற்றுங்கள் அல்லது அமெரிக்காவின் அதிபர் சில முஸ்லிம் நாடுகளின் முஸ்லிம்களை வெளியேற்ற விரும்புகிறார். இவை அனைத்தும் நிச்சயமாக இஸ்லாமிய எதிர்ப்பு சிந்தனையின் விளைவாகும். சில முஸ்லிம் பிரிவுகளின் செயல்களும் இவ்வாறு செய்யத் தூண்டுகின்றன. அத்துடன் இஸ்லாமிய போதனையின் உண்மையும் கூட இம்மக்களுள் பெரும்பாலாருக்குத் தெரியவில்லை. எனவே நாம் எல்லா இடத்திலும் எங்கெல்லாம் தாக்கத்தை ஏற்படுத்தும் அளவுக்கு தூதுச் செய்தியை எட்ட வைக்கும் பணியை செய்ய முடிகிற அளவுக்கு நமது எண்ணிக்கை இருக்குமோ அங்கு தமது தப்லீக் திட்டத்தில் இஸ்லாத்தின் உண்மையான போதனையை எடுத்து வைத்து தாக்கத்தை விளைவிக்கும் திட்டத்தையும் செயல்படுத்த வேண்டும். எங்கெல்லாம் இஸ்லாத்திற்கு எதிரான சக்திகள் ஓங்கிக் கொண்டிருக்கிறதோ அந்த நாடுகளில் அந்த வீச்சை உடைப்பதற்கு முயற்சி செய்ய முடியும் என்றால், ஒழுங்கமைக்கப்பட்ட ஒரு முயற்சி செய்ய முடியும் என்றால், அதனை அஹ்மதிய்யா ஜமாஅத் மட்டுமே செய்ய முடியும். மற்ற முஸ்லிம்கள் இஸ்லாத்தின் அழகிய போதனையை வெளிப்படுத்துவது மற்றும் இஸ்லாத்தின் தூதுச் செய்தியை கொண்டு சேர்க்கும் பணியைச் செய்யவே முடியாது. ஏனெனில் அதற்கான அமைப்பும் அவர்களிடம் இல்லை. அதற்கான அறிவும் அவர்களிடம் இல்லை. இந்தப் பணி ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுடன் இணைந்திருப்பவர்கள் மூலமே செய்யப்பட வேண்டும் என்று விதிக்கப்பட்டுள்ளது. ஆகவே இவ்விஷயத்தில் முக்கியத்துவத்தை நாம் புரிய வேண்டும்.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் ஓரிடத்தில் கூறுகிறார்கள்: எந்த அளவுக்கு வேகத்துடன் பொய்யும் உண்மையும் மோதுகிறதோ அதே அளவுக்கு உண்மையின் ஆற்றல் தீவிரமடைகிறது.

ஹுஸூர் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்: இது இயல்பான காட்சியாகும். உண்மை எவ்வளவு வேகமாக எதிர்க்கப்படுமோ அந்த அளவுக்கு அது மின்னுகிறது. தமது பொலிவைக் காட்டுகிறது. இதனை நாமே சோதித்துப் பார்த்துள்ளோம். எங்கெல்லாம் நம்மைப் பற்றி தீவிரமாக (எதிர்த்துப்) பேசப்பட்டதோ அங்கு ஒரு ஜமாஅத் உருவாகி விட்டது. எங்கு கேட்டு விட்டு அமைதியாக இருந்தார்களோ அங்கு அதிகமாக முன்னேற்றம் ஏற்படுவதில்லை. (மல்ஃபூஸாத் தொகுதி 5 பக்கம் 310-311; 1985 ஆம் ஆண்டு பதிப்பு - இங்கிலாந்தில் அச்சடிக்கப்பட்டது) ஆகவே இந்த முஸ்லிம்களின் தரப்பில் செய்யப்படும் எதிர்ப்புகள் மூலமாக அஹ்மதிய்யத்திற்கு அறிமுகம் கிடைக்கிறது; முன்னேற்றமும் கிடைக்கிறது. அல்ஜீரியாவிலும் நமது தப்லீகினால் ஒருவேளை ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களைப் பற்றியோ ஜமாஅத்தைப் பற்றியோ இந்த அளவுக்கு அறிமுகம் ஏற்பட்டிருக்காது. அந்த அளவுக்கான ஓர் அறிமுகம் இந்த ஜமாஅத்திற்கு எதிரான வழக்குகள் மற்றும் பத்திரிகைகளில் நமக்கு எதிராக எழுதப்பட்டவை மூலமாக ஏற்பட்டுள்ளது. நல்லியல்பு கொண்டவர்களிடம் இதனால் நல்ல தாக்கம் ஏற்படுகிறது. அதேபோன்று முஸ்லிம் அல்லாத நாடுகளிலும் இஸ்லாத்திற்கு எதிரான கோஷங்கள் உள்ளன. இவை மூலமாக அதிகமதிகம் நாமும் கூட அஹ்மதிய்யத் என்ற உண்மை இஸ்லாத்தை அறிமுகப்படுத்துவதற்கு முயற்சி செய்ய வேண்டும். நான் கூறியதுபோன்று அமைதி நிறைந்த போதனையைப் பரப்ப வேண்டும். ஒருபக்கம் இதனால் ஒருவேளை நமக்கு எதிர்ப்பும் அதிகமாகலாம். சில இடங்களில் எதிர்ப்பு அதிகமாகியும் உள்ளது. அன்னியர்களிடம் கிறித்தவர்களிடம் இருந்து எதிர்ப்பு வந்துள்ளது. உதாரணமாக, கிழக்கு ஜெர்மனியின் சமூக இனவாதிகள் பலதையும் கூறுகின்றனர். ஆனால் நல்லியல்பு கொண்டவரிடம் நமக்கு இசைவான தாக்கம் ஏற்பட்டுக் கொண்டும் இருக்கிறது. ஜமாஅத்தின் அறிமுகமும் ஏற்படுகிறது. ஆகவே இதனால் நாம் பயப்படுவதற்கு பதில் மகிழ்ச்சி அடைந்தவர்களாக நமது பணியை விரைவுபடுத்த வேண்டும். ஒவ்வோர் அஹ்மதியும் தமது முன்மாதிரி மற்றும் வெளிப்பாடு மூலமாக தப்லீகில் பங்கெடுக்க வேண்டும்.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகிறார்கள்: இஸ்லாத்தின் பாதுகாப்பு மற்றும் உண்மையை வெளிப்படுத்துவதற்கு முதலில் நீங்கள் உண்மையான முஸ்லிமின் முன்மாதிரியாகிக் காட்டுவது எல்லாவற்றிலும் முதல் அம்சமாகும். இரண்டாவது அம்சம், இதன் சிறப்பு மற்றும் முழுமைகளை உலகில் பரப்புங்கள். (மல்ஃபூஸாத் தொகுதி 8 பக்கம் 323; 1985 ஆம் ஆண்டு பதிப்பு - இங்கிலாந்தில் அச்சடிக்கப்பட்டது) அல்லாஹ் நமக்கு இதற்கான வாய்ப்பினை தருவானாக! நாம் நமது வாழ்வை இதற்கேற்ப அமைப்பவர்களாவோமாக! உண்மையான முஸ்லிம்களின் முன்மாதியைக் காட்டுவோமாக! இந்த எல்லா வகையான எதிர்ப்புக்கிடையிலும் இஸ்லாத்தின் சிறப்பு மற்றும் முழுமைகளை உலகில் பரப்புவர்களாக ஆவோமாக! உண்மையான இஸ்லாத்தின் பாதுகாப்பு மற்றும் உண்மையை வெளிப்படுத்துவர்களில் நம்மில் ஒவ்வொருவரும் ஆகி விடுவோமாக!

தொழுகைக்குப் பிறகு நான் சில ஜனாஸா காயிப் தொழுகையைத் தொழ வைப்பேன். முதலாவது ஜனாஸா காயிப் காதியனைச் சேர்ந்த கண்ணியத்திற் –குரிய மவ்லானா ஹக்கீம் முஹம்மது தீன் சாஹிப் அவர்களுடையதாகும். இவர் கண்ணியத்துக்குரிய அஸீஸுத்தின் சாஹிப் உடைய மகனாவார். 15 மார்ச் 2017 –ல் தமது 97– வது வயதில் இவர்கள் வஃபாத் ஆனார்கள். اِنَّا لِلّٰهِ وَاِنَّا اِلَيْهِ رَاجِعُوْنَ இவர்களது தந்தை வழிப் பாட்டனார் மவ்லவி ஹஸ்ரத் ஹக்கிம் வஸீருத்தின் சாஹிப் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுடைய சஹாபி ஆவார்கள். 313 சஹாபாக்

*(தொடர்ச்சி கடைசிப் பக்கம்...)*

# 13 அக்டோபர் 2016 (வியாழனன்று) கனடாவிலுள்ள ஜமாஅத்திற்காக தமது வாழ்வை அர்ப்பணித்துள்ள இளம் பெண்களுக்கு ஹுஸூர் அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்களுடன் நடைபெற்ற வகுப்பில் ஹுஸூர் அவர்கள் இளம்பெண்களுக்கு வழங்கியுள்ள பொன்னான போதனைகள்

நிகழ்ச்சி திருக்குர்ஆன் திலாவத்துடன் ஆரம்பமானது. நாஜியா ஹஸன் அவர்கள் திருக்குர்ஆன் ஓதினார்கள். அதன் உருது மொழியாக்கத்தை சித்ரா சயீத் அவர்கள் வாசித்தார்கள். பாஸிமா சாஜித் அவர்கள் ஒரு நபிமொழியின் அரபி வாசகத்தைப் படித்தார்கள். அதன் உருது மொழியாக்கத்தை சதஃப் மிர்ஸா அவர்கள் வாசித்தார்கள். ஆன்ஸா நஸீர் மிர்ஸா அவர்கள் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் ஒரு மேற்கோளை படித்தார்கள். அதற்குப் பிறகு அஸ்மாரா காயினாத் அவர்கள் லுப்னா சலீம் அவர்கள் வதீஹா ஷஹ்ஷாதி அவர்கள் மற்றும் ஸாயிரா ஸஃபீக் ஆகியோர் "மார்க்கத்தில் உறுதியாக நிலைத்திருப்பது ஜமாஅத்திற்காக வாழ்வை அர்ப்பணித்துள்ள ஒரு பெண்ணின் அடிப்படைப் பண்பாகும்" என்ற தலைப்பில் தத்தமது கருத்துக்களை எடுத்துக் கூறினர்.

இதற்குப் பிறகு ஹுஸூர் அவர்களின் அனுமதியுடன் பெண்கள் கேள்விகளைக் கேட்டனர்.

❖ ஒரு பெண் நாம் பார்க்கும் கனவுகள் ஷய்த்தானிடமிருந்து காட்டப்படுகின்றதா அல்லது அல்லாஹ்விடமிருந்து காட்டப்படுகின்றதா என்பதை நாம் எவ்வாறு தெரிந்து கொள்வது? என்று கேட்டார்.

இதற்கு ஹுஸூர் அவர்கள் இவ்வாறு பதில் கூறினார்கள்: மனோதத்துவ நிபுணர்கள் ஒவ்வொரு மனிதனுக்கும் இரவில் 3 அல்லது 4 கனவுகள் வருகின்றன என்று கூறுகின்றனர். அவற்றில் சிலவற்றை மனிதன் நினைவில் வைத்திருக்கின்றான் சிலவற்றை மறந்து விடுகின்றான் அல்லது எல்லா கனவுகளையும் அவன் மறந்து விடுகின்றான். சிலர் எங்களுக்கு கனவுகள் வருவதேயில்லை என்று கூறுகின்றனர். அவர்கள் எந்த அளவு ஆழமான தூக்கத்தில் இருந்துள்ளனர் என்றால் இரவு என்ன நடந்தது என்பது அவர்களுக்கு தெரிவதே இல்லை. கனவுகள் எல்லாருக்கும் வருகின்றது. சில நேரங்களில் நல்ல கனவுகள் கூட வருகின்றது. மனிதனின் மூளை நல்லதாக இருந்தால் அவனது எண்ணங்கள் நல்லதாக இருந்தால் பிறகு அவருக்கு நல்ல கனவுகள் வந்து கொண்டிருக்கும். இரவில் நீங்கள் மோசமான திரைபடங்களைப் பார்த்து விட்டு தூங்கினால் அல்லது வேறு ஏதாவது வீணான விஷயங்களை பார்த்து விட்டு தூங்கினால் சில நேரங்களில் இதுபோன்ற கனவுகள் வருகின்றன. மூளையின் மீது இந்த விஷயங்களினால் ஒரு மனோதத்துவ தாக்கம் ஏற்படுகின்றது. சில கனவுகளை அல்லாஹ் குறிப்பாக ஒருவருக்கு வழிகாட்டுவதற்காக காட்டுகின்றான். அதில் சில தூதுச் செய்திகள் இருக்கும் சில விஷயங்கள் புரியாமல் இருக்கும். ஹஸ்ரத் யூஸுஃப் (அலை) அவர்களின் காலத்தில் மன்னர் கனவு கண்ட போது அதற்கு விளக்கம் கூறியவர்கள் இது உங்களது மூளையிலுள்ள எண்ணங்களாகும். அதன் காரணமாகவே கனவு வந்துள்ளது. ஏழு பசுக்கள் மற்றும் ஏழு கதிர்கள் என்பதற்கு எந்த பொருளும் இல்லை என்று கூறி விட்டனர். ஆனால் ஹஸ்ரத் யூஸுஃப் (அலை) அவர்களுடன் சிறையில் இருந்த கைதிகளில் ஒருவர் விடுதலை அடைந்தார். ஹஸ்ரத் யூஸுஃப் (அலை) அவர்கள் அந்த கைதியிடம், மன்னரிடம் சென்று என்னைப் பற்றி கூற வேண்டும் என்று கூறி இருந்தார்கள். அந்தக் கைதி மன்னரின் இந்தக் கனவைக் கேட்டதும் அவருக்கு ஹஸ்ரத் யூஸுஃப் (அலை) அவர்களின் நினைவு வந்து விட்டது. பிறகு ஹஸ்ரத் யூஸுஃப் (அலை) அவர்கள் இதற்கு விளக்கமாக எவ்வாறு உங்கள் மீது நல்ல காலக்கட்டம் வரும். பிறகு பஞ்சத்தின் காலம் வரும் என்பதையும் இந்த காலக்கட்டத்தில் உங்களிடமுள்ள நல்ல விளைச்சல்களை பஞ்சம் நிலவும் வருடங்களுக்காக பாதுகாத்து வையுங்கள் என்று கூறினார்கள். பிறகு ஹுஸூர் அவர்கள் அந்த பெண்ணுக்கு விளைச்சல் என்றால் என்ன? அறுவடை என்றால் என்ன? என்பதைப் பற்றி கூறினார்கள். பிறகு ஹுஸூர் அவர்கள் கூறினார்கள்: கோதுமையில் ஒரு பகுதி இருக்கின்றது. அதற்குள் நெல் நிறைந்திருக்கும். அதனை நாம் கதிர்கள் என்று கூறுகின்றோம். எந்நிலையிலும் அது ஒரு கனவாகும். அதற்கான விளக்கத்தை ஹஸ்ரத் யூஸுஃப் (அலை) அவர்கள் கூறினார்கள். பிறகு பஞ்சம் வந்தது. பிறகு ஹஸ்ரத் யூஸுஃப் (அலை) அவர்களை மன்னர் கைதிலிருந்து விடுவித்து விட்டார்கள். இது அவர்களின் விடுதலைக்கான ஒரு வழியாக ஆகி விட்டது. அந்த மன்னர் அவர்களை தனது நிதியமைச்சராக நியமித்தார்.

சில கனவுகள் எப்படிக்பட்டதாக இருக்கின்றது என்றால் அவற்றின் விளக்கம் புரியாமல் இருக்கும். ஆனால், ஹஸ்ரத் யூஸுஃப் (அலை) அவர்களுக்கு அல்லாஹ் கனவுகள் தொடர்பாக சிறப்பான அறிவை வழங்கியிருந்தான். எனவே, அவர்களுக்கு கனவு புரிய வந்தது. எனவே, மனிதர்களுக்கு அல்லாஹ் சில நல்ல கனவுகளையும் காட்டுகின்றான். அவற்றின் தாக்கம் மனிதனின் உள்ளத்தில் ஏற்படுகின்றது. நல்ல கனவாக இல்லாமல் இருந்தால் உள்ளத்தில் அதனால் எத்தகைய தாக்கம் ஏற்படுகின்றது என்றால் அதன் விளைவு நல்லதாக இருக்காது என்ற எண்ணம் ஏற்படுகின்றது. எனவேதான் சிலர் கனவுகளுக்கு என்ன பொருள் என்பது புரியாமல் இருக்கின்றது என்று கூறுகின்றனர். எனவே, எப்போது ஒரு கனவைப் பார்த்தாலும் அதனால் உங்களது உள்ளத்தில் நல்ல அல்லது தீய தாக்கம் ஏற்பட்டால் இதற்கு இரண்டு நிலைமைகள் ஏற்படும்போது ஸதக்கா கொடுத்து விடுங்கள். ஷய்த்தானிய கனவுகள் வருகின்றன என்றால் அவை இவ்வாறு இருக்கும். உதாரணமாக, ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் பொய்யர் என்று எங்களுக்கு கனவில் காட்டப்பட்டது என்று சில மக்கள் கூறுகின்றனர். இவ்வாறு கனவு கண்டிருந்தால் அது ஷய்த்தானிய கனவாகும். எவர்களைப் பற்றி இந்த நபர் எனக்குப் பிறகு வருவார். அவர் எனது மார்க்கத்தை பரப்புவார் என்று பெருமானார் (ஸல்) அவர்கள் கூறி இருந்தார்களோ, எவர்கள் பெருமானார் (ஸல்) அவர்களின் மார்க்கத்தை உலகில் மீண்டும் நிலைநாட்ட வேண்டியது இருந்ததோ அவரை பற்றி அவர் பொய்யர் என்று கூறுவது முற்றிலும் தவறாகும். அல்லாஹ்வின் ஆதரவு எப்போதும் தன்னுடன் இருக்கின்றது என்று ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் அறைகூவல் விடுத்துக் கூறியுள்ளார்கள். எனவே இதுபோன்ற கனவுகள் ஷய்த்தானிய கனவுகளாக இருக்கின்றன. ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் உண்மையாளர் என்று நூறு மனிதர்களுக்கு கனவில் கூறப்பட்டு அதற்கு எதிரில் ஒன்றிரண்டு பேருக்கு அவர்கள் பொய்யராக இருக்கின்றார்கள் என்று கனவு வந்தால் அந்தக் கனவைப் பார்த்தவர் சுயமே பொய்யராவார். அந்தக் கனவு ஷய்த்தானிய கனவாகும். கனவுகளுக்கான விளக்கமும், பல்வேறு விதத்தில் இருக்கின்றது. உதாரணமாக, ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் காலத்தில் ஒருமுறை முஹம்மது அஹ்ஸன் என்ற பெயரை உடைய ஒரு நபரது கல்லறை கடைவீதியில் இருப்பதைக் கனவில் பார்த்தார்கள். அவர் கடைவீதியிலேயே அடக்கம் செய்யப்பட்டிருப்பதை அவர்கள் கனவில் கண்டார்கள். இப்போது சில மக்கள் இது நல்ல கனவாகும் என்று கூறுவர். மக்கள் நடந்து சென்று கொண்டிருக்கும்போதே அவரது கபரில் துஆ செய்வார்கள் என்று கூறுவர். ஆனால், ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களிடம் இந்தக் கனவைக் கூறியபோது அவர்கள் முஹம்மது அஹ்ஸன் என்ற பெயரை உடைய ஒரு நபர் அஹ்மதிய்யத்தை கை விட்டு விட்டு முர்தத் ஆகி விடுவார் அல்லது அவர் நயவஞ்சகராக இருப்பார் என்று கூறினார்கள். பின்னர் இதே போன்ற நிலைமைகள் ஏற்பட்டன. ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் சஹாபியாக இருந்த ஒரு நபர் ஹஸ்ரத் இரண்டாவது கலீஃபத்துல் மஸீஹ் (ரலி) அவர்களின் கிலாஃபத் காலக்கட்டத்தில் ஜமாஅத்தை கை விட்டு விட்டு சென்று விட்டார். அவர்களது பெயரும் முஹம்மது அஹ்ஸன் ஆகும். இவ்வாறு இந்த விஷயம் வெளிப்பட்டு விட்டது. இவ்வாறு கனவுகளுக்கும் கூட விளக்கங்கள் உள்ளன. ஆனால் அதுபற்றி உங்களுக்குப் புரிந்தாலும் புரியாமல் இருந்தாலும் நீங்கள் ஸதக்கா கொடுத்து விடுங்கள். ஏனென்றால் ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு கனவின் விளக்கமும் புரிவதில்லை. எனவே இதற்கான சாதாரண சிகிச்சை இதுவாகும். அதாவது நல்ல கனவு பார்த்தாலும் தீய கனவு பார்த்தாலும் ஸதக்கா கொடுத்து விட வேண்டும்.

❖ ஒரு பெண் இஸ்லாம். பரிணாம வளர்ச்சி பற்றி என்ன கருத்தை கூறுகிறது? என்று கேட்டார்.

இதற்கு ஹுஸூர் அவர்கள் இவ்வாறு பதில் கூறினார்கள்: பரிணாம வளர்ச்சி இருந்து வந்தது என்று இஸ்லாம் கூறுகிறது. மனிதன் பரிணாம வளர்ச்சியின் மூலமாகவே முழுமையை அடைந்துள்ளான். ஆனால், பரிணாம வளர்ச்சி பற்றி டார்வின் கூறியுள்ள தியரி சரியானது என்பதை நாம் ஏற்றுக் கொள்ள மாட்டோம். மனிதன் வண்டிலிருந்தும் உருவாகவில்லை. குரங்கிலிருந்து தோன்றவும் இல்லை. சிறிது காலத்திற்கு முன்பு *National Geography* ஓர் ஆராய்ச்சியின் அடிப்படையில் வண்டுகளில் பல்வேறு வண்டுகள் தேர்வு

செய்யப்பட்டு அதிலிருந்து இறுதியில் மனிதன் உருவாகியுள்ளான் என்று கூறியது. மனிதனின் தனியான ஒரு முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது. மனிதன் ஒரு தனி இனமாக இருக்கின்றான். மனிதன் மெதுமெதுவாக முன்னேறினான். முதலில் மனிதன் விலங்குபோன்றே இருந்து வந்தான். விலங்குகள்போன்று அவன் காடுகளிலேயே வசித்து வந்தான். அங்கு அவன் வேட்டையாடினான். பிறகு அவன் குகைகளில் வாழ்ந்து வந்தான். பிறகு இரும்பின் மூலம் பணிகளைச் செய்ய ஆரம்பித்தான். பிறகு விவசாயத்தின் காலக்கட்டம் வந்தது. இவ்வாறு மெதுமெதுவாக அந்தக் காலக்கட்டங்களில் முன்னேற்றம் ஏற்பட்டது. உங்களை நீங்களே பார்த்து கொள்ளுங்கள். ஒரு தலைமுறைக்கு இடையிலுள்ள இடைவெளியே போதுமானதாக இருக்கின்றது. நீங்கள் பார்க்கின்றீர்கள் இன்ஸ்டாகிராம், வாட்ஸ்அப், அய்பேடு, அய்ஃபோன் மற்றும் இன்னும் பல பொருட்கள் வந்து விட்டன. உங்களது பாட்டி இவற்றை யெல்லாம் கற்பனை செய்துகூட பார்த்திருக்க மாட்டார்கள். இன்னும் சொல்வதென்றால் சிலரது தாய்மார்களுக்கும் கூட இவை என்ன என்பது தெரியாது. இதற்கு என்ன பொருள் என்றால் உங்களது மூளையில் முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது. எவ்வாறு சிந்தனைகளில் வளர்ச்சி ஏற்பட்டதோ அவ்வாறே இந்தக் காலமும் நவீன காலமாக ஆகி விட்டது. அறிவு வளர்ந்தது. இவ்வாறு உங்களது மூளையில் முன்னேற்றம் ஏற்பட்டது. உங்களது இந்த ஆராய்ச்சி அல்லது அறிவின் தாக்கம் அதிகமாகிக் கொண்டேயிருந்தது. இதுவே உண்மையான பரிணாம வளர்ச்சியாகும். முதலில் சிறிய சிந்தனையே இருந்து வந்தது. காட்டு வாழ்க்கை இருந்து வந்தது. பிறகு குகை வாழ்க்கை இருந்தது. பிறகு இரும்பை மனிதன் பயன்படுத்தினான். பிறகு விவசாயம் செய்வது ஆரம்பமானது. சிறு சிறு கருவிகளை உருவாக்க ஆரம்பித்தனர். ஆப்பிரிக்காவில் 1980 -களில் நான் அங்கு இருந்த சமயத்தில் பல சிறு விவசாயிகள் அங்கு இருந்தனர். சிறு சிறு நிலங்கள் இருந்தன. அவர்களிடம் இருந்த கருவி வாளைப்போன்று இருந்தது. அதன் மூலமாக அவர்கள் விதை விதைத்தனர். நிலத்தை மிருதுவாக்கினர். எனவே, அதற்கான கருவிகள் அவர்களிடம் இருந்தன. சிறு மண்வெட்டி மற்றும் கொடுவாள் ஆகியவற்றின் மூலமாக அவர்கள் விதைவிதைக்கும் பணியைச் செய்து வந்தனர். இப்போது நவீன விவசாயம் வந்து விட்டது. டிராக்டர் போன்றவை பயன்படுத்தப் படுகின்றன. இவ்வாறே ஐரோப்பாவிலும் நடந்திருக்கின்றது. நீங்கள் இவர்களது அருட்காட்சியகத்திற்குச் சென்றால் இவர்கள் பயன்படுத்திய பழைய கருவிகளை உங்களுக்கு காட்டுவார்கள். எனவே, மனிதனின் முன்னேற்றம் தான் பரிணாம வளர்ச்சியாகும். மற்றபடி குரங்கிலிருந்து மனிதன் உருவாகவில்லை. மனிதன் மனிதனாகவே இருந்தான். இதைப் பற்றி மேலும் நீங்கள் படிப்பதாக இருந்தால் ஹஸ்ரத் நான்காவது கலீஃபத்துல் மஸீஹ் ரஹ்மஹுல்லாஹுத்தஆலா அவர்கள் எழுதியுள்ள *Revelation, Rationality, Knowledge and Truth* என்ற நூலைப் படியுங்கள்.

❖ நாம் அல்லாஹ்வை கனவில் பார்க்க முடியுமா? என்று ஒரு பெண் கேள்வி கேட்டார்.

இதற்கு ஹுஸூர் அவர்கள் இவ்வாறு கூறினார்கள்: அல்லாஹ்வுக்கு எந்தவொரு வடிவமும் இல்லை. அவனோ ஓர் ஒளியாக இருக்கின்றான். இறைவா! நீ சுயமே உன்னை எனக்கு காட்டுவாயாக என்று ஹஸ்ரத் மூஸா (அலை) அவர்கள் கூறினார்கள். என்னை உன்னால் பார்க்க முடியாது என்று அல்லாஹ் கூறினான். அதற்குப் பிறகு அல்லாஹ் இந்த மலையைப் பார் என்று கூறினான். நான் அதன் மீது எனது சிறிய தோற்றத்தை வெளிப்படுத்து -வேன். அதை நீங்கள் பார்த்து விட்டால் என்னையும் எம்மால் பார்க்க முடியும் என்று அல்லாஹ் கூறினான். பிறகு அல்லாஹ் என்ன செய்தான்? அந்த மலையில் எத்தகைய தோற்றம் வெளிப்பட்டது என்றால் அந்த மலையே அதனால் துண்டு துண்டாகி விட்டது. ஹஸ்ரத் மூஸா (அலை) அவர்கள் அதைப் பார்த்து மயக்கமுற்று விழுந்தார்கள். பிறகு அவர்கள் அல்லாஹ்வே! நான் தவ்பா செய்கின்றேன். நான் பார்க்க மாட்டேன் என்று கூறினார்கள். இவ்வாறு அல்லாஹ்வுக்கு வெளிப்படையாக எந்தவோர் உருவமும் இல்லை. அவன் ஒளியாவான். மேலும் எல்லா இடங்களிலும் அவன் இருக்கின்றான். மேலேயும் இருக்கின்றான். கீழேயும் இருக்கின்றான். வலப்பக்கத்திலும் இருக்கின்றான். இடப் பக்கத்திலும் இருக்கின்றான். இப்போது கனடாவில் இரவாக இருக்கின்றது. ஆசியா கண்டத்தில் பகலாக இருக்கின்றது. அல்லாஹ்வால் இந்த இரண்டையும் பார்க்க முடிகிறது. அல்லாஹ்வின் ஒளி எல்லா பக்கமும் சமமாக படிந்து கொண்டிருக்கின்றது. அது வெளிச்சம் குறைவாக இருக்கின்ற அந்த ஒளியல்ல. கஷ்ஃப் காட்சியைக் காண்கின்ற நிலையில் அல்லாஹ்வின் குரலைக் கேட்க முடியும். அது ஆற்றல்மிக்கதாகவும் எழுச்சிமிக்கதாகவும் இருக்கும். அது எத்தகைய ஒரு நிலையாக இருக்கின்றது என்றால் அதை கேட்ட உடனேயே அல்லாஹ் எனது உள்ளத்தில் இந்த விஷயத்தைப் போட்டு விட்டான் என்று நீங்கள் கூறுகின்றீர்கள். அது உள்ளத்தில் ஆழமாக பதிந்து விடுகின்றது. அல்லாஹ் உருவக வடிவில் சில நபர்களில் தென்படுகின்றான். அதற்கு அல்லாஹ் அந்த நபரைப் போன்று இருக்கின்றான் என்று பொருளல்ல. உங்களது திருப்திக்காக மட்டுமே அவன் அவ்வாறு தென்படுகின்றான். சில நேரங்கள் அல்லாஹ் இன்ன இன்ன நபர்களின் வடிவில் வந்து தங்களுடன் பேசுவதை மக்கள் பார்க்கின்றனர். அது அல்லாஹ்வின் பண்புகளை வெளிப்படுத்தும் செயலாகும். இந்தியா மற்றும் பாகிஸ்தானின் மிகப்பெரும் தத்துவவாதியாகவும் கவிஞருமாக இருந்த இக்பால் அவர்களின் கவிதைக்கு பதில் கூறும் வகையில் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் மூத்த மகளான ஹஸ்ரத் நவாப் முபாரகா பேகம் சாஹிபா (ரலி) அவர்கள் ஒரு கவிதையை எழுதியிருந்தார்கள். இக்பால் அவர்கள் தமது கவிதையில் அல்லாஹ்வே! நீ எங்கு இருக்கின்றாய்? நீ எனக்கு தென்படவில்லையே என்று எழுதி இருந்தார். அதற்கு ஹஸ்ரத் நவாப் முபாரகா பேகம் சாஹிபா அவர்கள் தமது கவிதையில் பதில் கூறும்போது என்னை உருவக வடிவில் பார்க்கலாம் என்று இறைவன் கூறுகின்றான் என்று எழுதியிருந்தார்கள். அதாவது என்னை நீங்கள் வெளிப்படையான முறையில் பார்க்க முடியாது. ஆனால், எப்படி பார்க்கலாம்? மரங்களிலும், வானங்களிலும், இயற்கையின் அழகிலும், மலைகளின் பள்ளத்தாக்குகளிலும், நயாகரா அருவியிலும் என்னைப் பாருங்கள் என்பதே இதன் கருத்தாகும். அவன் எல்லா இடங்களிலும் தென்படுகின்றான்.

❖ சில நேரங்களில் மனிதனின் மனநிலையின் காரணமாக அவனிடம் கோபமும் சோம்பலும் அவன் மீது மிகைத்து நிற்கின்றன. இதிலிருந்து எவ்வாறு தவிர்ந்திருக்க முடியும்? என்று ஒரு பெண் கேட்டாள்.

இதற்கு ஹுஸூர் அவர்கள் இவ்வாறு பதில் கூறினார்கள்: நபிமொழியில் இவ்வாறு வருகின்றது. உங்களுக்கு கோபம் வரும்போது நீங்கள் நின்று கொண்டிருந்தால் படுத்து விடுங்கள். தண்ணீர் குடியுங்கள். சோம்பலை அகற்றுவது உங்கள் பணியாகும். அது உங்களது தைரியத்தின் மூலமாக விலகி விடும். அதற்கு உங்களது அகத்திலுள்ள ஆற்றலின் தேவை இருக்கின்றது. “சோம்பலை தவிர்த்திடுங்கள். சுகம் விரும்பி வாழாதீர்” (என்ற ஹஸ்ரத் இரண்டாவது கலீஃபத்துல் மஸீஹ் (ரலி) அவர்களின் கவிதை வரிகளை ஹுஸூர் அவர்கள் குறிப்பிட்டார்கள்.) தொடர்ந்து ஹுஸூர் அவர்கள் கூறினார்கள்: உங்களுக்கு தூக்கம் வருகின்றது என்று நீங்கள் கூறுவதாக இருந்தால் 18 மணி நேரம் தூங்கினாலும் கூட உங்களுக்கு சோம்பல் இருந்து கொண்டேதான் இருக்கும். உழைக்கின்றவர்கள் சில மணி நேரம் தூங்கி விட்டு புத்துணர்ச்சியுடன் எழுகின்றனர். கோபத்தை பொறுத்தவரையில் எந்நிலையிலும் கோபம் வரும்போது இஸ்திஃபார் செய்ய வேண்டும். அதிகமாக இஸ்திஃபார் செய்யுங்கள். அல்லாஹ்விடம் உதவி கேளுங்கள். அல்லாஹ்வே! எனது கோபத்தை தனித்து விடு என்று துஆ செய்யுங்கள்.

❖ ஒரு மாணவி ஹுஸூர் அவர்களிடம் நான் பத்தாவது வகுப்பில் 89 சதவிகிதம் மதிப்பெண் பெற்றுள்ளேன். நான் டாக்டர் ஆகலாமா? என்று கேட்டார்.

உங்களுக்கு அட்மிஷன் கிடைத்து விட்டால் கண்டிப்பாக டாக்டராக ஆகுங்கள் என்று ஹுஸூர் அவர்கள் பதில் கூறினார்கள்.

❖ ஒரு சிறுமி உங்களுக்கு உங்களது தாயாரின் எந்த போதனை உங்கள் நினைவில் வருகின்றது? என்று ஹுஸூர் அவர்களிடம் கேட்டார்.

அதற்கு ஹுஸூர் அவர்கள் தொழுகையை நிறைவேற்றுங்கள். ஒருபோதும் பொய் கூறக் கூடாது என்ற போதனையைத்தான் அவர்கள் குழந்தைகளுக்கு கூறி வந்தார்கள் என்று பதில் கூறினார்கள்.

❖ ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களுக்காக இதற்கு முன்னர் நிகழாத ஓர் அடையாளம் வெளிப்படும் என்று ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறியுள்ளார் -களே! அது பற்றி கூறுங்கள் என்று ஒரு சிறுமி ஹுஸூர் அவர்களிடம் கேட்டார்.

அதற்கு ஹுஸூர் (அய்) அவர்கள் இவ்வாறு பதில் கூறினார்கள்: பெருமானார் (ஸல்) அவர்கள் ஒருபோதும் இவ்வாறு அடையாளம் வெளிப்படாது என்று கூறவில்லை. இன்னும் சொல்வதென்றால், ஒரே மாதத்தில் சந்திரனுக்கும் சூரியனுக்கும் கிரகணங்கள் நிகழ்ந்துள்ளன. அந்த சமயத்தில் வாதம் செய்பவர் ஒருவர் இருப்பார். இந்த முன்னறிவிப் -பிற்கேற்ப வந்திருப்பவன் நான்தான் என்று அவர் வாதம் செய்வார். அந்த முன்னறிவிப்பு இதுவாகும். சந்திரனுக்கு கிரகணம் ஏற்படுகின்ற மூன்று இரவுகளில் அல்லது தேதிகளில் முதல்

EDITOR
MUZZAMMIL AHMAD
Mobile : + 91 98885-67232
SUB EDITOR
RAFEEQ AHMAD
E-mail : editorbadrtamil@gmail.com
Website : www.akhbarbadrqadian.in
www.alislam.org/badr

REGISTERED WITH THE REGISTRAR OF THE NEWSPAPERS FOR INDIA AT NO PUNTAM/2016/68785

The Weekly **BADAR** Qadian

பதர் வாரப் பத்திரிகை காதியான்

Distt. Gurdaspur (Pb.) INDIA Qadian - 143516

Postal Reg.No. GDP-39/2017-2019 Vol. 2 Thursday 20 April 2017 Issue No. 16

MANAGER
NAWAB AHMAD
Tel. : +91 1872-224757
Mobile : +91 94170- 20616
E-mail : managerbadrqnd@gmail.com
**ANNUAL SUBSCRIPTION** : Rs.300/-

*இரவில் சந்திர கிரகணம் நிகழும். அதாவது பொதுவாக சந்திரனுக்கு பதிமூன்று பதினான்கு மற்றும் பதினைந்தாம் தேதிகளில் கிரகணம் நிகழும். அதில் முதலாவது இரவில் இந்த சந்திர கிரகணம் நிகழும். (இந்த விஷயங்களைப் பற்றி நான் பத்திரிகையாளர்களுக்கு நான் கூறி வந்துள்ளேன். நீங்கள் M.T.A பார்த்திருந்தால் உங்களுக்கும் தெரியும் என்று ஹுஸூர் அந்த சிறுமியிடம் கூறினார்கள்.*

*தொடர்ந்து கூறினார்கள்: பெருமானார் (ஸல்) அவர்கள் இந்த தேதிகளில் முதல் தேதியில் சந்திர கிரகணம் நிகழும் என்று கூறினார்கள். சந்திர மாதத்தின் கணக்கிற்கேற்ப முதல் தேதி 13 ஆகும். சூரியனுக்கு கிரகணம் நிகழ்வதற்கு நிர்ணயிக்கப்பட்ட நாட்களில் இரண்டாவது நாளில் கிரகணம் நிகழும். அதாவது 27,28,29 ஆகிய நாட்கள் சூரியன் கிரகணம் நிகழ்வதற்கான நாட்களாகும். அந்தக் காலத்தில் எல்லா மதங்களும் சந்திரனின் கணக்கின்படியே இருந்து வந்தது. அப்போது Gregorian Calendar இருக்கவில்லை. சூரியனுக்கு கிரகணம் ஏற்படும் நாட்களில் இரண்டாவது நாளன்று சூரிய கிரகணம் நடைபெறும் என்று முன்னறிவிப்பில் கூறப்பட்டிருந்தது. அது ரமலான் மாதம் 28 ஆம் தேதியாகும்.*

*முன்னறிவிப்பில் குறிப்பிட்டிருந்தபடி ரமலான் மாதத்தில் பதிமூன்றாவது நாளில் சந்திரனுக்கு கிரகணம் ஏற்பட்டது. 1894 -ல் Eastern Hemisphere -ல் (கிழக்கு அரைக்கோளத்தில்) இந்த கிரகணம் நிகழ்ந்தது. கிழக்கத்திய உலகில் இது தென்பட்டது. 1895 -ல் Western Hemisphere (மேற்கு அரைக்கோளத்தில்) இந்த கிரகணம் நிகழ்ந்தது. இங்கு அமெரிக்காவில் இது தென்பட்டது. பத்திரிகைகள் நடந்த எல்லா சம்பவங்களையும் எழுதின. எனவே, இந்த அடையாளம் நிறைவேறி விட்டது. இந்த கிரகணம் நிகழ்ந்த பிறகு ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் வாதம் செய்யவில்லை. மாறாக, அவர்கள் இதற்கு முன்பே வாதம் செய்திருந்தார்கள். அவர்கள் மவ்லவிகளிடம் மஸீஹ் மற்றும் மஹ்தி தோன்றும்போது சந்திரனுக்கும் சூரியனுக்கும் ஒரு மாதத்தில் கிரகணம் ஏற்படும் என்று ஹதீஸில் இருக்கின்றது என்று நீங்கள் கூறி வந்தீர்கள். இப்போது அந்த அடையாளம் நிறைவேறி விட்டது என்று கூறினார்கள். முதலில் இவர்கள்தான் கிரகணம் நிகழ்கின்ற அடையாளம் நிறைவேறவில்லை. எனவே ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் தமது வாதத்தில் பொய்யராக இருக்கின்றார்கள் என்று கூறினர். ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் இப்போது கிரகணம் நிகழ்ந்து விட்டது என்று கூறினார்கள். அதற்குப் பிறகு மவ்லவிகள் இந்த ஹதீஸே பொய்யானது. விஷயம் முடிவுக்கு வந்து விட்டது என்று கூறினர். மவ்லவிகளுக்கு தங்களை இவ்விஷயத்திலிருந்து விடுவித்துக் கொள்வதே அவர்களின் நோக்கமாக இருந்தது.* **(தொடரும்)**

*(குத்பா தொடர்ச்சி...)*

–களின் பட்டியலில் இவர்களது பெயர் இடம் பெற்றுள்ளது. இவர்களது பெயரை தமது ஆயினயே கமாலாத்தே இஸ்லாம், ஸமீமே அஞ்சாமே ஆத்தம் ஆகிய இரு நூல்களில் குறிப்பிட்டுள்ளார்கள். ஹஸ்ரத் மவ்லவி ஹக்கீம் வஸீருத்தின் சாஹிப் காங்கடாவின் ஒரு மத்ரஸாவின் தலைமையாசிரியராக இருந்தார்கள். ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுடைய முன்னறிவிப்பிற்கு ஏற்ப காங்டாவில் ஏற்பட்ட கடும் பூகம்பத்தின்போது அன்னாரும் அவரது பள்ளியின் மாணவர்களும் அற்புதகரமான முறையில் தப்பித்து விட்டார்கள்.

ஹக்கிம் முஹம்மத் தீன் சாஹிப் ஜூன் 1920 –ல் முக்கேரியான் என்ற ஹோஷ்யார்பூர் மாவட்டத்திலுள்ள முக்கேரியான் என்ற ஊரில் பிறந்தார்கள். மெட்ரிக் தேர்வை லாஹூரிலும், இன்டர் தேர்வை காதியானிலும் பயின்று தேர்ச்சி பெற்றார். முன்ஷி ஃபாஸில் பட்டம் பெற்றார். இரண்டு வருடங்களாக லாஹூரின் மருத்துவக் கல்லூரியில் கல்வி கற்றார். அங்கிருந்து ஹக்கீம் பட்டம் பெற்றார். 1939 முதல் 1944 வரை அஸிஸ்டென்ட் ஸ்டேஷன் மாஸ்டர் ஆக பணி செய்தார். 1943 –ல் ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்களுடைய திட்டத்தின் கீழ் வாழ்வை அர்ப்பணிக்க விண்ணப்பித்தார். அப்போது ஹஸ்ரத் இரண்டாவது கலீஃபத்துல் மஸீஹ் அவர்கள் பணியை தொடர்ந்து செய்தவாறு தப்லீகும் செய்யுமாறு வழிகாட்டல் வழங்கினார்கள். ஆனால் ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்களுடைய குத்பாவைக் கேட்ட பிறகு வாழ்வை அர்ப்பணித்து முபல்லிக் ஆக பணி செய்ய வேண்டும் என்பது அன்னாரின் விருப்பமாக இருந்தது. கடைசியில் இந்த விருப்பத்தினால் தொடர்ந்து இரண்டாவது கலீஃபத்துல் மஸீஹ் அவர்களுக்கு எழுதி கொண்டிருந்ததனால் ஒரு நேரத்தில் அவர்கள் முபல்லிக் ஆக எடுத்துக் கொள்ளப்பட்டார்கள். பம்பாயில் முதலில் முபல்லிக் இன்சார்ஜ் ஆக ஆக்கப்பட்டார்கள். மவ்லானா அப்துர் ரஹீம் நய்யர் சாஹிபின் கீழ் உதவியாளராக பணி செய்தார்கள். பிறகு அவர்களே முபல்லிக் இன்சார்ஜ் ஆனார்கள். ஒட்டுமொத்தமாக 25 ஆண்டுகள் தப்லீக் களத்தில் பணி செய்யும் வாய்ப்பு பெற்றார்கள். 1972 –ன் இறுதியில் காதியான் அழைக்கப்பட்டார்கள். அங்கு மத்ரஸா அஹ்மதிய்யாவின் ஆசிரியராக நியமிக்கப்பட்டார்கள். பிறகு 12 வருடங்கள் அஹ்மதிய்யா மத்ரஸாவின் தலைமையாசிரியராக பணியாற்றும் வாய்ப்பு பெற்றார்கள். தாருல் கஸாவின் நாஸிம் ஆகவும், இந்திய மஜ்லிஸ் அன்ஸாருல்லாஹ்வின் தலைவராகவும், உறுப்பினர் மற்றும் தலைவர் மஜ்லிஸ் கார்பர்தாஸ் ஆகவும் பணியாற்றும் வாய்ப்பு அன்னாருக்கு கிடைத்திருந்தது. வக்ஃபே ஜதீதின் நாஸிம் ஆகவும் ஆக்கப்பட்டார்கள்.

2011 –ல் நான் அவர்களை சத்ர் அஞ்சுமன் அஹ்மதிய்யாவின் தலைவராக ஆக்கினேன். 2014 வரை சத்ர் அஞ்சுமன் அஹ்மதிய்யாவாக பணியாற்றி வந்தார்கள். இந்த அடிப்படையில் இவர்களது பணியின் காலம் மிகவும் பரந்தது. பல வருடங்களில் பரவியுள்ளது. ஹஜ்ஜே பத்ல் முறையில் பைத்துல்லாஹ்வை ஹஜ் செய்யும் வாய்ப்பும் கிடைத்திருந்தது. திருக்குர்ஆனின் திலாவத்தை மிக நல்ல முறையில் நல்ல குரலில் ஓதி வந்தார்கள். குரல் வளமும் நன்றாக இருந்தது. இவர்களின் வஸிய்யத் முதலில் பத்தில் ஒன்றாகும். பிறகு ஏழில் ஒன்றாகும். பிறகு ஐந்தில் ஒன்றை வஸிய்யத் செய்தவராக இருந்தார்கள். மிகவும் தன்னலமற்றவராக இருந்தார்கள். மிகவும் பணிவுடன் தொண்டு செய்தார்கள். முழுமையான கட்டுப்படுதலுடன் ஜூனியர் முரப்பிகளின் கீழ் பணி செய்தார்கள். அல்லாஹ் மர்ஹூமின் தகுதியை உயர்த்துவானாக! இவர்களது சந்ததிகளில், மூன்று மகள் பாகிஸ்தானிலும் மூன்று பேர் இந்தியாவிலும் உள்ளனர். இரு மகன்கள் ஜமாஅத்திற்கு தொண்டு செய்கிறார்கள். அவர்களுக்கும் அல்லாஹ் பற்று மற்றும் களங்கமற்ற தன்மையுடன் தமது பைஅத்தின் உறுதிமொழியை நிறைவேற்று–வதற்கான வாய்ப்பும், பணியாற்றும் வாய்ப்பும் தருவானாக!

இரண்டாவது ஜனாஸா ஃபஸ்ல் இலாஹி அன்வர் சாஹிப். இவர் கண்ணியத்திற்குரிய மாஸ்டர் இமாம் அலி சாஹிப் உடைய மகன் ஆவார். இவர் 4 மார்ச் 2017 –ல் தமது 90 –வது வயதில் ஜெர்மனியில் வஃபாத் ஆகியுள்ளார்கள். اِنَّالِلّٰہِ وَاِنَّا اِلَیْہِ رَاجِعُوْنَ

16 ஏப்ரல் 1927 –ல் டேராவில் பிறந்தார். 1946 –ல் காதியானின் தஃலீமுல் இஸ்லாம் கல்லூரியில் Fsc தேர்வு எழுதி தேர்ச்சி பெற்றார்கள். 1947 –ல் தம்மை வக்ஃப் செய்து கொண்டார்கள். அதற்குப் பிறகு BSc படிப்பில் சேர்ந்தார்கள். 1950 –ல் லாஹூர் அரசுக் கல்லூரியில் Bsc படித்தார். 1951 –ல் ஜாமிஅத்துல் முபஷ்ஷிரீனில் சேர்ந்தார். அதன் பிறகு இவர்களது தொண்டுகள் மிக நீண்டவையாகும். 1956 –ல் கானா முபல்லிக் ஆக அனுப்பப்பட்டார்கள். 1960 வரை அங்கிருந்தார்கள். 1960 முதல் 1964 வரை ஜாமிஆ அஹ்மதிய்யா ரப்வாவின் ஆசிரியராக இருந்தார்கள். 1964 முதல் 1967 வரை மேற்கு ஜெர்மனியில் முப்பலிக் ஆக இருந்தார்கள். 1968 –ல் ஆப்பிரிக்காவில் நைஜரீயாவுக்கு அனுப்பப்பட்டார்கள். 1972 வரை அங்கிருந்தார்கள். 1972 –ல் மீண்டும் ஜெர்மனி வந்தார்கள். 1977 வரை அங்கு பணியாற்றினார்கள். 1979 –ல் ஹதீகத்துல் முபஷ்ஷிரீன் செயலராகப் பணி செய்தார்கள். கூடுதல் நாஸிர் இஸ்லாஹோ இர்ஷாத் வ தஃலீமுல் குர்ஆன் ஆகவும் நியமிக்கப்பட்டார். 1982 –ல் கேம்பியாவுக்கு முபல்லிக் ஆக சென்றார்கள். 1983 வரை அங்கிருந்தார்கள். பிறகு நைஜரீயாவுக்கு முபல்லிக் ஆக நியமிக்கப்பட்டார்கள். 1986 வரை அங்கு இருந்தார். 1986 –ல் மீண்டும் பாகிஸ்தான் சென்றார்கள். அங்கு ஜாமிஆ அஹ்மதிய்யாவின்

*(தொடர்ச்சி முதல் பக்கம்...)*

Printed & Published by: Jameel Ahmed Nasir on behalf of Nigran Board of Badar. Name of Owner: Nigran Board of Badar. And Printed at Fazle-Umar Printing Press. Harchowal Road, Qadian, Distt. Gurdaspur-143516, Punjab. And published at office of the Weekly Badar Mohallah - Ahmadiyya, Qadian, Distt. Gsp-143516, Punjab. India. Editor: Muzzammil Ahmad